## 57. அருவாவசு கதை

அருவாவசு என்பவன் அந்தணன் ஒருவனுடைய மகன். மறை முதலிய கலைகள் பலவற்றையும் வழுவற ஓதியுணர்ந்தவன். அன்பும் அறமும் அமைந்த நெஞ்சினன். பண்பு மிக்குடைய இவனுக்கு அண்ணன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பராவசு. அவன் நல்ல கல்வி அறிவுடையவனாயினும் புல்லிய தன்மை அமையப் பெற்றவன். வஞ்சம் நிறைந்த நெஞ்சினன். அக்காலத்தில் மன்னன் ஒருவன் அரிய வேள்வி யொன்று செய்தான். இவர்களிருவரும் வேள்வி முறையில் தேர்ந்திருந்தா ராகையால் வேந்தனுடைய வேள்வி யில் ஈடுபட்டு நின்றனர். வேள்வி நடைபெற்று வருங்கால் பராவசுவாகிய முன்னவன், பக்கத்தில் இருந்தபொழில் ஒன்றுக்குச் சென்றான். அப்பொழிலில் மாதவன் ஒருவன் மான் தோல் போர்த்து மாதவஞ் செய்திருந்தான். அவனைப்பராவசு கண்டான்; மான் என்று எண்ணினான். விரைந்து சென்று அடித்தான். அடி பலமானதாக விழவே அம்மாதபன் சுருண்டு விழுந்து உயிர் துறந்தான்.



அடித்தவனாகிய பராவசு விழுந்தவனுக்கு அண்மையிற் சென்று பார்த்தான். இறந்து கிடப்பவன் தன்னுடைய தந்தை யென்று அறிந்தான். விரைந்து சென்று தம்பியிடம் விளம்பினான். முன்னவனுக்கு நேர்ந்த தீவினையைக் கண்டு பின்னவனாகிய அருவாவசு உள்ளம் வருந்தினான். அரசனுடைய வேள்விக்கு இடையூறு நேரலாகாதென்று எண்ணினான். வேள்வியை முடிக்குமாறு அண்ணனிடம் கூறிவிட்டு இவன் காட்டிற்குச் சென்று அண்ணனுடைய தீவினை நீங்குமாறு அருந்தவம் புரிந்தான். பன்னீராண்டுகள் வரை தவம் நீடித்தது. பிறகு ஒருவாறு அத்தீவினை தொலைந்தது. இவன் மீண்டு வந்தான். முன்னவனாகிய பராவசு மன்னவனுடைய வேள்வியை முடித்து அரசனால் பெருஞ் சிறப்புப் பெற்று அந்நகரில் வாழ்ந்திருந்தான். அவன் இவனுடைய வரவை யறிந்து உள்ளம் வருந்தினான். பொருள் கொடுக்க வேண்டுமே என்று ஏங்கினான். அரசனிடஞ் சென்று, "இவன் கொலை செய்த தீவினையாளன். நம் முடைய நாட்டில் குடி புகுமாறு விடலாகாது" என்று கோளுரை புகன்றான். அரசன்

இதனை நம்பினான். நாட்டை விட்டுச் சென்று விடுமாறு நவின்றான். தன்னுடைய தீவினையைப் போக்குமாறு தவஞ் செய்த தம்பிக்கு அண்ணன் செய்த கைம்மாறு இவ்வாறாயது.

அருவாவசு தன் அண்ணனுடைய கொடுந் தன்மையைக் கண்டு உள்ளந் துடித்தான். மிகக் கொடியவனாகிய அண்ணன் இருமையிலும் கேடடைவானே என்று உள்ளம் வருந்தினான். காட்டிற்குச் சென்று கதிரவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். தேவர்கள் புடைசூழக் கதிரவன் எதிர்வந்து தோன்றினான். "உனக்கு வேண்டியது யாது கேள் தருகிறேன் " என்று சொன்னான். அருவாவசு கதிரவனைப் பார்த்து, "இறந்துபட்ட என் தந்தை உயர்ந்த கதியை அடைய வேண்டும். அறியாது அவரைக் கொன்ற என் அண்ணன் தீவினையில் இருந்து நீங்க வேண்டும்" என்று சொல்லி வேண்டினான். இவனுடைய பெருந்தன்மையை எண்ணித் தேவர்களும் வியந்தனர். இரண்டு
வரங்களையும் வழங்கினர். தீமைகளைப் புரிபவர்கட்கும் நல்லவர்கள் நன்மையையே புரிவார்கள் என்பது இவனிடத்தில் நன்கு விளங்கியது.

[தீயவர்கட்கும் நன்மை புரிதல்]

## 58. அலங்காரி கதை




அலங்காரி என்பவள் நல்ல தங்கையின் அண்ணன் மனைவி. இவள் ஒரு மன்னனுக்கு மனைவியாக இருந்தாளாயினும் விருந்தினரைப் போற்றும் பண்பு இவளிடம் மருந்துக்கும் கிடையாது. நல்ல தங்கை பஞ்சத்தால் வாடித் தன்னுடைய அண்ணன் இல்லத்துக்கு மக்களொடு வந்தாள். இவள் அவளுடைய குழந்தைகளையும் பாராட்டி விருந்தூட்டவில்லை. வைது கடுகடுத்ததுடன் கொடுமைகள் பல வுஞ்செய்தாள். அவைகளைப் பொறாத நல்லதங்கை தன் மக்களோடு கிணற்றிலே விழுந்து மாண்டாள். இதனால் அலங் காரிக்குத் தொல்லையும் பழியும் எல்லையில்லாமல் உண்டா யின. பொருளுடையவர்களாக இருக்கும்போது விருந் தோம்புதலைச் செய்யாத மடமை அறிவற்றவர்களிடத்திலே இருக்கும் என்பதை உலகம் இவளிடம் கண்டு கொண்டது.

[விருந்தோம்பா மடமை]

(நல்லதங்காள் கதை)

## 59. அல்லமர் கதை

அல்லம தேவர் என்பவர் வள்ளிகாவை என்னும் ஊரில் இறைவன் கூறாகத் தோன்றினார். இறைவன் கூறாகத் தோன்றிய இவர் புகழொடு சிறந்து விளங்கினார் என்று' புகலவும் வேண்டுமோ? பல விடங்கட்குஞ் சென்று ஆங்கி காங்குள்ளவர்கட்கு அருள்புரிந்துகொண்டிருந்தார்.



அந்நாளில் சித்தராமர் என்பவர் கரும யோகியாக இலங்கியிருந்தார். இவர் அவரைக் காணச் சென்றார். ஓரிடத்தில் சித்தராமரின் ஆட்களாகிய ஒட்டர்கள் பலர் குளம் ஒன்றை வெட்டுந் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இவர் அவர்களிடம் 'போய்ப் பயனற்ற தொழில்களில் உங்களைச் செலுத்திய சித்தராம ஒட்டன் யாண்டுளான்? என்று உசாவினார்.

அவர்கள் இவர் கூறியதைக் கேட்டு மிகவும் சினங் கொண்டார்கள் "மிகு புகழ் படைத்த எங்கள் சித்தராமப் பெருந்தகையை நீ இப்படிச் சொல்லலாமா?" என்று கூறிப் பலவாறு இகழ்ந்தார்கள். கற்களைப் பொறுக்கி இவர் மீது எறிந்தார்கள். கல்லொன்றும் இவர் மீது படவில்லை. நகைத்துக் கொண்டு நின்றார். இவர் அவர்களை ஒறுப்பதாயின் ஒரே சொல்லால் ஒழித்திருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யவில்லை.

சினத்தை அடக்கிக் கொள்பவன்தன் சினம் செல்லக் கூடிய இடத்திலே செல்லவிடாமல் அடக்கிக் கொள்வது தான் சிறப்பாகும். தன் சினம் செல்லாத இடத்தில் ஒருவன் தன் சினத்தை அடக்கினால் என்ன அடக்காமல் விட்டால் என்ன இரண்டும் ஒன்றே. அல்லமதேவரைப் போல்

சினம் செல்லக்கூடிய இடத்தில் செல்ல விடாமல் அடக்கியவனே சிறந்தவனாவான்.


(பிரபுலிங்க லீலை)

[சினத்தையடக்குதல்]

## 60. அவந்தன் கதை



அவந்தன் என்பவன் மாளவ நாட்டிலே அவந்திபுரி என்னும் ஊரிலே அந்நாளில் வசித்திருந்தான். இவன் தோன்றிய குலம் மறையவர் குலம். அந்தணனாகப் பிறந்த இவன் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகாது எல்லோரிடத்திலும் இரக்கமற்ற கொடியவனாக இருந்தான். பல வழிகளினும் பொருளைத் தேடித் தொகுத்தான். தானும் உண்ணாது தக்கார்க்கும் ஈயாது வைத்திருந்தான். உறவினர் முதலிய எவருக்கும் இவனாற்



சிறிதும் உதவியிலாது போகவே அனைவரும் இவனைத் தனியாக விட்டு அகன்றிருந்தனர். இவனிடம் பெரும் பொருள் இருத்தலையும் துணை யற்றவனாக இருப்பதையும் கள்ளர்கள் சிலர் அறிந்தனர். ஒரு நாள் நள்ளிரவில் புகுந்து பொருள்களை யெல்லாம் பற்றிச் சென்றனர். தடுக்க முயன்ற இவனுக்கு அடிகள் தாராளமாக விழுந்தன. தனித்திருந்தால் செலவேற்படாது என்று எண்ணிக் கொண்டிருந்த இவன் தனிமையின் பயனை அப்பொழுது தான் அறிந்தான். தானும் உண்ணாது பிறருக்கும் ஈயாது சேர்த்து வைப்பவனுடைய பொருளை

மற்றவர்கள் பற்றிச் செல்வார்கள் என்பதை இவன் உலகிற்கு நன்கு விளக்கினான்.

[பிசினன் பொருளிழப்பான்]

## 61. அவனன்றி ஓர் அணுவும் அசையாத கதை

தேவர் உலகிலே முன் காலத்தில் தேவர்கள் மிகுந்த செருக்குக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் தாங்களே பேராற்றல் படைத் தவர்களென்று சொற் போரிட்டுப் பிறகு மற்போர் செய்யவும்



தொடங்கினார்கள். இச்சமயத்தில் சிவபெருமான் ஓர் இயக்க வடிவங் கொண்டு அங்குச் சென்றார். இவர்களுக்கு முன்னே ஒரு துரும்பை எடுத்து நாட்டினார். பிறகு அங்குக் கூடியிருந்த தேவர்களைப் பார்த்து "இங்குக் கூடியிருக்கும் உங்களில் இத்துரும்பை அசைக்க வல்லவர் எவரோ அவர் தாம் பேராற்றல் படைத்தவராவர் எங்கே உங்களுடைய ஆற்றலைக் கொண்டு அசையுங்கள் பார்க்கலாம் " என்று கூறினார். தேவர்கள் "இதுதான ஒரு பெரிய வேலை" என்று கூறி எள்ளி நகையாடினார்கள் துரும்பை யெடுப்பதற்காகத் தொட்டுப் பார்த்தார்கள் அசையவில்லை. தங்களுடைய படைக் கலங்களை எல்லாம் அதன் மீது செலுத்திப் பார்த்தார்கள். எதற்கும் அத்துரும்பு சிறிதும் அசையவில்லை. தேவர்களுடைய ஆணவ மும் அடங்கியது.

''செம்மாந்து தற்புகழும் தேவர்குழு வும்மருள எம்மான் பிறவிபோல் இருந்தோர் துரும்புநிறீஇ அம்மாதன் செய்கை அனைத்துமெனக் காட்டினனே .

[அவனன்றி அணுவும் அசையாது ]

## 62. அவிச்சித்து கதை

அவிச்சித்து என்பவன் முன்னாளில் இருந்த மன்னர்களில் ஒருவன். இவனிடம் உடலாற்றல் நன்கு அமைந்திருந்த தாயினும் அறிவாற்றல் நன்கு அமையவில்லை. அரசாட்சியில் சிந்தை செலுத்தாமல் பிற வழிகளிலேயே சிந்தை செலுத்தித் திரிந்தான். அரசிளங் குமரிகட்குச் சுயம்வர மணம் எங்கேனும் நிகழ்ந்தால் இவன் அங்கே சென்று போராடித் தொல்லை விளைவிப்பான்.



விசிதபுரத்து மன்னன் மகள் வைசாலினி என்பவளுக்குச் சுயம்வரம் நிகழ்ந்தது. இவன் சும்மா இராமல் அங்கே சென்று வந்திருந்த மன்னர்களோடு போராடினான். அப்போரில் இவன் புறங்காட்டி யோடும்படியாக நேரிட்டது. ஆயினும் சுயம்வரத்துக்குரிய வைசாலினி இவனையே மணக்க விழைந்தாள். தான் விரும்பி வந்த குமரிமுன் தான் தோல்வியடைய நேர்ந்தமையை எண்ணி மனம் புழுங்கிய இவன் அவளை மணந்து கொள்ளவில்லை. காடு ஒன்றில் புகுந்து மறைந்திருந்தான். அப்பெண்ணும் அக்காட்டிலேயே புகுந்து தனித்திருந்தாள். பிறகு இருவரும் மணந்து மகிழ்ந்தனர். ஆயினும் நாடும் அரசும் பிற செல்வங்களும் இவன் காட்டிலிருக்கையில் கையை விட்டுப் போய்விட்டன. அறநெறி தவறிச் செல்லும் அரசன் செல்வத்தையும் குடிகளையும் ஒருங்கே இழந்து அல்லலுறுவான் என்பது இவனிடம் நன்கு புலனாகியது.

[அறநெறி தவறிச் செல்லுதல்]

## 63. அழகிய மணவாளன் கதை

திருவரங்கத்திற்கு அண்மையில் உள்ளதும் நிசுலாபுரி என்னும் மறுபெயரை உடையதுமான உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட நந்தசோழன் என்னும் மன்னன் வெகு காலம் பிள்ளையில்லாமலிருந்தான்.




அவன் திருவரங்கநாதனைக் குறித்துத் தவஞ் செய்தான். அத்தவத்தின் பயனாய்த் தாமரையோடையில் ஒரு தாமரை மலரில் ஒரு பெண் குழந்தை இருக்கக் கண்டான். அப்பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு போய்க் கமலவல்லி என்று பெயர் வைத்து வளர்த்து வந்தான். மங்கைப் பருவத்தை எய்திய அப்பெண் தோழியருடன் மலர்க்காவில் மலர் கொய்து விளையாடிக் கொண்டிருந்தாள். திருமகளின் கூறான அப்பெண்மணியைத் திருமணம் செய்துகொள்ளத் திருவரங்க நாதன் எண்ணினான். மிகு அழகான வடிவத்தோடு குதிரைமீது ஏறி வேட்டையாடிச் செல்லுகிற கோலமாய்க் கமலவல்லி திருமுன்பு எழுந்தருளிக் காட்சி கொடுத்தான். மிக அழகாக விளங்கிய அப்பெருமானைக் கண்டு கமலவல்லி காதல் கொண்டாள். அதனை யுணர்ந்த நந்தசோழன் அப்பெண்ணைத் திருவரங்க நாதனுக்கு மிகுந்த சிறப்போடு திருமணம் செய்து கொடுத்தான். அழகிய வடிவங்கொண்டு மணம் பெற்றுத் திருமணக் கோலத்தோடு விளங்கியபடியி னால் அப்பெருமானுக்கு அழகிய மணவாளன் என்று ஒரு பெயர் உண்டாகியது.

(அழகிய மணவாளன்)

## 64. அளவற்ற வடிவுற்ற கதை

கண்ணபிரான் தம் பொருட்டுத் துரியோதனனிடம் தூது செல்ல வேண்டுமென்று பாண்டவர்கள் எண்ணினார்கள். ஒவ்வொருவரும் தத்தமது எண்ணத்தைக் கண்ணனிடம் கூறினார்கள். கண்ணபிரான் சகாதேவனைப் பார்த்து, "உன்னுடைய எண்ணம் யாது?" என்று கேட்டார். சகாதேவன்



கண்ணனைப் பார்த்து, "நீ பூ பாரந் தீர்ப்பதற்காக வந்திருக்கிறாய். பாரதப் போர் நிகழாமற் போகாது. கட்டிப்போட்டால் பாரதப் போர் வராது உன்னை நான் நிறுத்தலாம்" என்று சொன்னான். இதனைக் கேட்ட கண்ணபிரான், "என்னை நீ எவ்வாறு கட்டுவாய்?" என்று கேட்டார். சகாதேவன், "உன்னுடைய வடிவங்களை யெல்லாம் காட்டு கட்டுகிறேன்" என்று சொன்னான். உடனே கண்ணபிரான், "எங்கே கட்டு பார்க்கலாம் என்று கூறித் தாம் அப்பொழுது உள்ளதைப்போல் பதினாறாயிரம் உருவங்களைக் கொண்டார். சகாதேவன் எல்லாவற்றிற்கும் மூல உருவம் இதுதான் என்று உணர்ந்து கண்ணபிரானுடைய அடியிணைகளைத் தன் கருத்தினாற் கட்டினான். கண்ணபிரான் மகிழ்ந்தார்."என்னுடைய அடிகளை இனிமேல் விட்டுவிடுக" என்று சொன்னார். சகாதேவனும் அவ்வாறே விட்டுவிட் டான்.

"அளவற்ற வடிவுற்ற "

(திருப்புகழ்)

[கண்ணன் ஆடல்]

## 65. அறிவிலிகளின் கதை

ஓர் ஊரிலே அறிவிலிகள் பலர் இருந்தார்கள். அவர் களின் தொகை ஏறக்குறைய இருபது இருக்கும். இவர்கள் இளமைப் பருவத்தில் கல்வியைக் கற்கவில்லை. தாய் தந்தையர்களுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடவாமல் அடங்காப் பிடாரிகளாகிக் கெட்டொழிந்து போனார்கள். அகவை முப்பதைத் தாண்டி விட்டது. அவ்வூருக்குப் பெரியவர் ஒருவர் வந்தார். அவர் இவ்வறிவிலிகளின் கூட்டத்தைப் பார்த்து வருந்தினார். "நீங்கள் இவ்வாறே இருந் தால் எதற்கும் பயன்படாத வீணர்களாகி விடுவீர்கள். அடுத்த ஊரிலே அறிஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து, "செந்நாப் போதார் செந்தமிழ்ச் சங்கம்" என்னும் பெயரோடு ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவு முதலியன நிகழ்த்துகிறார்கள். நீங்கள் அங்குச் சென்று அச்சங்கத்திற் சேர்ந்தால் அறிவு பெற்றுச் சிறப்படையலாம் " என்று கூறிவிட்டுச் சென்றார்.



அறிவிலிகள் பெரியவர் உரையின்படி அடுத்த ஊரில் 'இருந்த அச்சங்கத்தில் சென்று தாமும் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொண்டார்கள். இவர்களுடைய செய்தியை நன்கு உணர்ந்திருந்தும் எக்காரணத்தாலோ சங்கத்தார் இவர்களைத் தங்களுடைய சங்கத்திற் சேர்த்துக் கொண்டனர். ஆயினும் என்ன பயன்? நல்லறிவு மிகுந்து சிறந்த வர்களாகி விடவில்லை. பழமைபோல் அறிவிலிகளாகவே இருந்தார்கள். நல்ல அறிஞர்கள் கூட்டத்தைச் சேர்ந்திருந் தாலும் கீழ்மக்கள் மனநலம் உடையவர்களாக மாட்டார்கள் என்பது இவர்களிடம் நன்கு விளங்கியது.

[மன நலம் அடையாவாங் கீழ்]

## 66. அறிவுடை நம்பி கதை

அறிவுடை நம்பி என்பவன் பாண்டிய மன்னர்களில் ஒருவன். மதுரையில் அரசு புரிந்தவன். இவன் நூல்கள் பலவற்றைக் கற்றுச் சிறந்த அறிவுடன் திகழ்ந்தான். புலவர்கள் பலரை எப்பொழுதும் தன்னோடு வைத்துக்கொண்டு நூல்களை ஆராய்ச்சி செய்தான். அதனால் இவனுக்கு அறிவுடை நம்பி என்பது காரணப் பெயராக அமைந்தது. இவன் செய்யுள்களும் செய்துள்ளான்.



அறிவுடை நம்பியின் புகழ் திக்குகள் தோறும் பரவியது. பல அரசர்கள் இவனுடைய புகழைக் கண்டு பொறாமை கொண்டனர். இவன் எப்பொழுதும் நூலுங்கையுமாக இருக்கிறான். புலவர்களோடு பொழுது போக்குகிறான்; இவனை எளிதாக வென்று விடலாம் என்று முடிவு செய்தனர். இவன் கூரிய அறிவாளனாகையால் காரியத்தை வீரியமாகச் செய்து முடிப்பான் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. படையைத்னர். திரட்டிக்கொண்டு போருக்கு வந்த அறிவுடை நம்பியோ தனது அறிவு நல-த்தால் போருக்கு வந்த மன்னர்களைப் புறங்காட்டியோடச் செய்தான். அறிவுடையார் எல்லாம் உடையார் அன்றோ? அறிவு தீங்கு வந்த சமயத்தில் காப்பாற்றும் கருவி பகைவர்களால் கெடுக்க முடியாது பாதுகாத்தலைச் செய்யக்கூடியது; என்பதை அனைவரும் இம்மன்னனிடம் அறிந்து கொண்டனர்.

[அறிவு]

## 67. அறுபுரத்தை அழித்த கதை

சிவபெருமான் முப்புரங்களை எரித்தபொழுது அங்கு எரிக்கப்படாமல் மிகுந்து நின்ற அறுபதினாயிரம் அசுரர்கள் தங்களுடைய உறவினர்கள் இறந்தபடியால் மிகுந்த வருத்தத்தை அடைந்தார்கள். சம்புமார்க்கம் என்னும் நற்பதியை அடைந்து நான்முகனைக் குறித்துப் பலநாள் தவஞ் செய்தார்கள். நான்முகனுடைய அருளினாலே அழித்தற்கரிய ஆறு

பட்டணங்களைப் பெற்று மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.



வசுதேவருடைய நண்பரும் யாஞ்ஞவல்கியரின் மாண வருமாகிய பிரமதத்தர் என்னும் முனிவர் மிகச் சிறந்த நற்பதியாக விளங்கிய அவ்வறுபுரத்தை யடைந்து அங்கு ஆர்வத்தை என்னும் ஆற்றின் கரையில் குதிரை வேள்வி (அசுவமேதயாகம்) செய்யத் தொடங்கினார். அப்பொழுது வியாசர் முதலிய முனிவர் கூட்டங்களும் பிறரும் அங்கு வந்தார்கள். அப்பொழுது அறுபுரத்து அசுரர்களாகிய நிகும்பன் முதலியோர் அங்கு வந்து, " எங்களுக்கு அவியுணவிற் பங்கு கொடுக்க வேண்டும். உங்களுடைய மணமாகாத பெண்களையும் தருதல் வேண்டும். மேலும் பொருளும் வழங்குதல் வேண்டும். அவ்வாறு கொடுக்கா விட்டால் இங்கு வேள்வி செய்யக்கூடாது ” என்று சொல்லித் தடுத்தார்கள். பிரமதத்தர் அசுரர்கள் கேட்டதைக் கொடுப்பதற்கு இசையவில்லை. அசுரர்கள் பலபேர் அங்குத் திரண்டு வேள்விச் சாலையைச் சூழ்ந்தார்கள். மணமாகாத பெண்களைக் கவர்ந்து கொண்டு பலவாறு இடையூறு செய்தார்கள். வசுதேவருடைய விருப்பப்படி கண்ணன் பலராமரோடும் யாதவப் படைகளோடும் அங்குச் சென்றார். எதிர்த்து வந்த அசுரர் களோடு போர் செய்தார். தம்முடைய ஆழிப் படையால் நிகும்பன் முதலிய அசுரர்களை யெல்லாம் அழித்தார். அவர்களால் கவர்ந்துகொண்டு போகப்பட்ட பெண்களையும் மீட்டுக்

கொண்டுவந்து அவ்வேள்வியை நிறைவேறச் செய்தார். அசுரர்களுடைய புரமும் அழிந்தொழிந்தது.

[அறுபுரம் அழிந்தது]

## 68. ஆறுமுகன் ஆட்டில் ஏறிய கதை

நாரதமுனிவர் நிலவுலகில் ஒரு வேள்வி செய்தார். அவ்வேள்வியில் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் திரண்டிருந்தார்கள். வேள்வித் தீயில் இருந்து ஒரு ஆட்டுக்கடாதோன்றியது. அது மிகக் கொடியதாக இருந்தமையின் அதனைக் கண்டு அனைவரும் அஞ்சியோடினார்கள்.



அக்கடா ஓடியவர்களைத் துரத்திச் சென்று கொன்றது. நாரதமுனிவர் முதலியோர் திருக்கைலையை நோக்கி ஓடினர். சிவபெருமானிடம் சொல்லுதற்காக ஓடியவர்கள் முருகக் கடவுளைக்கண்டு அப்பெருமானிடஞ் செய்தியைக் கூறினார்கள். முருகக்கடவுள் வீரவாகுதேவரைப் பார்த்து "அக்கடாவினைப் பிடித்துக்கொண்டு வருவாயாக" என்று கட்டளையிட்டார். வீரவாகுதேவர் அவ்வாறே சென்று கடாவினைப்பிடித்துக்கொண்டு வந்தார். நாரதர் முதலியோர் அவ்வாட்டுக்கடாவை ஊர்தியாகக் கொண்டருளுதல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்: முருகக்கடவுள் அவர்களின் வேண்டுகோளின்படியே ஆட்டுக்கடாவைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டருளினார்.

[தகரேறியது]

(கந்த புராணம்)

**69. அனங்கமோகினி கதை**

அனங்கமோகினி என்னும் பெயரினையுடைய இவள் பாண்டிவள நாட்டில் திருமருதம் என்னும் ஊரில் முன்னாளில் வாழ்ந்திருந்தாள். பொதுமகளாகிய, இவளுடைய அழகு கண்டவர் உள்ளங்களை யெல்லாம் கவரத்தக்க கவினுடைய தாகச் சிறந்து திகழ்ந்தது. மன்னரும் பிறரும் தத்தம் அரும்பொருள்களை யெல்லாம் இவள்பால் தந்து அறிவிழந்தனர். அரும்பொருளையே பரம்பொருளாக எண்ணிய இவள் எத்தகைய இழிகுலத்தினரையும் கொடிய நோயாளர்களையும் தீக்குணம் உடையவர்களையும் சிறிதும் வெறுக்காமல் தழுவினாள். எவ்வளவு

மிகுதியாகப் பொருள் வழங்கியவர்களையும் இவள் மனமாரத் தழுவவில்லை. இவளிடம் கொடிய நோய்கள் பல குடிகொண்டன.



ஆயினும் இவளுடைய வெளியழகை விரும்பிய பலர் பிணத்தை வெறுப்புடன் தழுவுவதுபோல் இவளைத் தழுவிச் சென்றனர். இவளுடைய இன்ப நுகர்ச்சியைப் பெற்றோர் பிணத்தைத் தழுவு வதுபோல் இருக்கிறதே யொழிய இன்பமாகத் தெரிய வில்லையே என்று பேசிக் கொண்டனர். விலைமாதர்களின் பொய்மையான சேர்க்கை இருட்டறையில் முன்பின் தெரியாத ஒரு பிணத்தைத் தழுவியது போன்றதாம் என்பது இவளிடம் நன்கு பெறப்பட்டது.

(விலைமாதர் சேர்க்கை)

## 70. அன்னப் பறவைகள் அழிந்த கதை

ஓரிடத்தில் பெரியமலை யொன்று இருந்தது. அம்மலை நேர் செங்குத்தாக அமைந்திருந்தது. அம்மலைமீது வேடர்கள் முதலியோர் ஏறமுடியாது. அம்மலையின் உச்சி வசிப்ப தற்குத் தகுதியான இடம் என்பதை உணர்ந்த ஓர் அன்னப்பறவை, தன் இனங்களோடு அம்மலையின் உச்சியில் வசித்துக்கொண்டிருந்தது. அவ்விடம் மனிதர்கள் ஏறற் கரியதாக இருந்தமையால் அங்கு அன்னக் கூட்டங்கள் மிகுதியாகப் பெருகி யிருந்தன.



ஒருநாளிரவு கடுமையாக மழை பொழிந்தது. அப்பொழுது காகம் ஒன்று மழையில் நனைந்து வருந்திக் கொண்டு அன்னங்கள் வசித்திருந்த இடத்திற்கு வந்தது. தான் இரவு தங்கி யிருப்பதற்குச் சிறிது இடந்தர வேண்டு மென்று அன்னப் பறவைகளைக் கேட்டது. மனம் இரங்கிய அன்னப்பறவைகள் தங்கிச் செல்லுமாறு கூறின. ஆனால், முதிய அன்னம் ஒன்று காகத்திற்கு அங்கு இடம் கொடுத் தால் பிறகு தொல்லை ஏற்படக்கூடுமென்று தடுத்தது. மற்ற அன்னங்கள் முதிய அன்னத்தின் மொழியைக் கேளாமல் 'இடங்கொடுத்தன.

இரவு அன்னங்களோடு தங்கிய காகம் அங்கு எச்சமிட்டது. அவ்வெச்சத்திலிருந்து ஆலமரம் ஒன்று முளைத்துக் கிளம்பி நாளடைவில் விழுதுவிட்டது. அவ்விழுது மிக நீளமாக வளர்ந்து மலையின் அடிவாரம் வரையில் தொங்கியது. வேடர்கள் அவ்விழுதைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறினார்கள். அன்னப் பறவைகளை யெல்லாம் கண்ணி வைத்துப் பிடித்தார்கள். நாளடைவில் அந்த இடத்தில் அன்னப் பறவைகளின் பெயரே இல்லாமற் போய்விட்டது.

"நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்கும் துன்று கிளைக்குந் துயர்சேரும் - குன்றிடத்தில் பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக்கிடங் கொடுத்த அன்னமுதற் பட்டதுபோலாம் "

[தீயவர்கட்டு இடங்கொடுத்தல்]

(நீதி வெண்பா)

## 71. ஆட்டுக்கிடைநாய் அழிந்த கதை

இடையன் ஒருவன் ஆட்டுக்கிடை ஒன்றை வைத்திருந்தான். அக்கிடைக்குக் காவலாக அவனிடம் பெரிய நாய் ஒன்று இருந்தது. ஒருநாள் இடையன் தன்னுடைய கிடையைப் பெரிய காடு ஒன்றுக்கு ஓட்டிக்கொண்டுபோய் மேய்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய நாய் பலவிடங்களினுஞ் சுற்றிக்கொண்டு திரிந்தது. ஓரிடத்தில் செடிகொடிகளடர்ந்திருந்தன. அவ்விடத்தில் கரடி யொன்று அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அதனுடைய உடல் முழுவதும் மயிர்கள் அடர்ந்திருந்தன.



நாய் அதனை நன்கு ஆராய்ந்து பார்க்கவில்லை. பெரிய செம்மறியாடு ஒன்று மேய்வதை விட்டுவிட்டுச் சோம்பேறித் தனமாக உறங்கிக் கொண்டிருப்பதாக நாய் எண்ணியது. அதனை எழுப்பிவிடத் துணிந்து அதன்மேல் பாய்ந்து வாயால் இறுகப் பற்றியது. உறங்கிக் கொண்டிருந்த கரடி திடுக்கிட்டு விழித்தது. நாயை உறுதியாகப் பிடித்துக் கொண்டு நன்கு கீறி அமுக்கியது. நாய் வாய்விட்டுக் குரைக்கக்கூட முடியாமல் இறந்தொழிந்தது. எதனையும் நன்கு ஆராய்ந்து பார்த்துச் செய்தல் வேண்டும். இன்றேல் ஆட்டுக்கிடைநாயைப் போல்தான் அழிந்தொழிய நேரிடும்.

“காட்டுக் கரடி நிலை காணாமல் ஆட்டுக்கிடை நாய் அழிந்த கதைபோல"

[ஆராய்ந்து செயல்புரிதல்]

# 72. ஆண்டாள் சூடிக் கொடுத்த கதை

பாண்டிவளநாட்டில் திருவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் என்பவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் ஒருநாள் பூந்தோட் டத்தில் திருத்துழாய்ப் பாத்தி அமைப்பதற்காக நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தார். அப்பொழுது நிலத்திலிருந்து ஒரு பெண் மகள் தோன்றினாள். ஆழ்வார் அப்பெண்ணைத் தன்னுடைய குழந்தையாகக் கொண்டார். கோதை என்று பெயர் வைத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்.



அப்பெண் இளமை முதற் கொண்டே திருமாலிடத்தில் பெருமாலுடையவளாக விளங்கினாள். அம்மாலையே தான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்தாள். தன் தந்தையார் அவ்வூரில் வாழும் பெருமாளுக்குச் சாத்தும் பொருட்டுக் கட்டி வைக்குந் திருமாலையை அவரில் லாத சமயம் பார்த்து எடுத்துத் தான் அணிந்துகொண்டு, " எம்பெருமானுடைய அழகிற்கு என்னுடைய அழகு நேராக ஒத்திருக்கிறதா? இல்லையா?" என்று நிலைக் கண்ணாடியின்முன் நின்று பார்ப்பாள். தந்தையார் வருவதற்குமுன் மாலையைக் கழற்றி எடுத்துத் தெரியாமல் இருந்தவிடத்தில் வைத்து விடுவாள். இவ்வாறு பல நாட்கள் நிகழ்ந்தன.

ஆழ்வார் இச்செய்தியை அறியாமல் மாலையைத் திருமாலுக்குச் சாத்தி வந்தார். மாலும் மாலையை மகிழ்ச்சி யுடன் ஏற்றுக் கொண்டிருந்தார். ஒருநாள் ஆண்டாள் மாலையை அணிந்துகொண்டு அழகு பார்த்திருக்குஞ் சமயத்தில் வெளியிற் சென்றிருந்த ஆழ்வார் விரைவாக வீட்டுக்குத் திரும்பி வந்தார். பூமாலையைத் தம்முடைய மகள் அணிந்திருப்பதைப் பார்த்தார். மிகுந்த சினங்கொண்டு பலவாறு கண்டித்துரைத்தார். அன்று மாலையைக் கொண்டுபோய்ச் சாத்தாமல் நீக்கிவிட்டார்.

அன்றிரவில் திருமால் ஆழ்வாருடைய கனவில் தோன்றினார். "உம்முடைய மகள் சூடிக் கொடுக்கும் மாலைதான் நமக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது" என்று அருளிச் செய்தார். அதனால் ஆழ்வார் தம்முடைய மகளைத் திருமகள் என்றே எண்ணினார். அன்று முதல் கோதை சூடி வைத்த மாலையையே திருமாலுக்குச் சாத்தினார். அதனால்

கோதைக்குச் "சூடிக் கொடுத்தாள்" என்னும் பெயர் உண்டாகியது. எல்லாப் பொருளையும் ஆளுந் தன்மையும் கோதைக்கு அமைந்திருந்தபடியால், "ஆண்டாள்" என்றும் ஒரு பெயர் வழங்கியது.

[சூடி கொடுத்தது]

(ஆண்டாள் வரலாறு)

## 73. ஆண் பனை பெண் பனையான கதை



தொண்டைவள நாட்டிலே திருவோத்தூர் என்னும் சிவப்பதியிலே அடியார் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுக்குப் பனம்பழம் படைக்கும் பணியை மேற்கொண்டிருந்தார். சிவபெருமானுடைய பயனுக்காக அவர் பல பனைமரங்களைப் பயிராக்கினார். அவ்வாறு ஆக்கப்பட்ட பனைமரங்களெல்லாம் ஆண் பனைமரங்களாகவே முடிந்தன. இதனைக் கண்டு அவ்வூரில் வாழ்ந்திருந்த சமணர்கள் எள்ளி நகையாடினார்கள். "உங்களுடைய கடவுளின் ஆற்றல் இவ்வளவுதானா?" என்று கூறி இகழ்ந்தார்கள். அவ்வடியார் மனம் வருந்திக் கொண்டிருந்தார். அந்நாளில் திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவோத்தூருக்கு எழுந்தருளினார். அடியவர் பிள்ளையாரைக் கண்டு தம்முடைய குறையைச் சொல்லிக்கொண்டார். பிள்ளையார் திருக்கோவிலுக்குச் சென்று பதிகம் பாடினார். * குரும்பை ஆண் பனை யீன்குலையோத்தூர் " என்று பதிகத்திலே பாடினார். இறைவனுடைய திருவருளால் ஆண் பனைகளெல்லாம் பெண் பனைகளாகி மிகுதியாகக் காய்க்கத் தொடங்கின. இதனைக் கண்டோர் மிகுந்த வியப்படைந்தனர். திருஞானசம்பந்தருடைய திருவாக்கினாலே பாடப்பட்டமையால் அப்பனைகளெல்லாம் இறுதிநாளில் வீடுபேற்றை அடைந்தன .



"குரும்பை ஆண்பனை ஈன்குலையோத்தூர்"

(திருவருட் செயல்]

(தேவாரம்)

## 74. ஆதன் கதை

ஆதன் என்பவன் வேடுவர் குலத்தில் தோன்றியவன். ஏமகூடம் என்னும் மலைச் சாரலிலே வாழ்ந்திருந்தான். காடுகளிலே புகுந்து விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி அவைகளின் ஊனை உண்பதே இவனுடைய தொழிலாக இருந்தது. காட்டில் வாழுகிற உயிர்த் தொகைகள் இவனைக் கண்டால் கலங்கி நடுங்கிப் பறந்தோடிப் போகும்.



ஒருநாள் இவன் வேட்டைக்குத் திரிந்து கொண்டிருந் தான். ஓரிடத்தில் அன்றிற் பறவைகள் இரண்டு ஒன்றி மகிழ்ந்திருந்தன. உடனே அவற்றின்மீது இவன் கணையைச் செலுத்தினான். ஒன்று உடனே துடிதுடித்துக் கீழே விழுந்தது. மற்றொன்று பதைத்து வாடிப் பறந்து திரிந்தது அப்பொழுது அவ்விடத்திற்கு வான்மீகி முனிவர் வந்தா அன்றில் துடிப்பதைக் கண்டார். வேடனைப் பலவா! வைதார். வேறொரு முனிவர் வந்தார்; அவர் வை கொண்டிருக்கிற வான்மீகி முனிவரைப் பார்த்து, "தன்னு டைய ஊனைப் பெருக்குதற்குத்தான் வேறொன்றின் ஊனை தின்னும் இவன் எவ்வாறு அருளுடையவனாக இருப்பான் என்று சொல்லிக்கொண்டு சென்றார்.


தன்னுடலைப் பெருக்க வைப்பதற்கு வேறொன்றின் உடலைத் தின்பவன் அருளுடையவனாக இருக்கமாட்டான் என்பதை உலகம் இவன்பால் கண்டுணர்ந்தது.

(ஊனுண்டல்]

(வான்மீகம்)

## 75. ஆத்திரேயன் கதை

ஆத்திரேயன் என்பவன் முன்னாளில் சோழ நாட்டில் இருந்த ஓர் அந்தணன். நல்ல அழகனாகத் தோன்றிய இவன் நல்ல அறிவற்றவனாக



இருந்தான். ஆயினும் இவன் இவனுடைய தாய் தந்தையருக்கு ஒரே மகனாக இருந்தபடியால் தாய் தந்தையர் இவன்பால் மிகுந்த அன்பு பாராட்டினர். அவர்களுடைய அன்பு இவனுக்குக் கேட்டைத்தான் விளைவித்தது. இவன் தக்க அகவையை அடைந்தும் எத்தகைய முயற்சியும் செய்யாமல் இன்ப போகங்களில் இனிது திளைத்து மகிழ்ந்து வந்தான். மறையோதுதல் முதலிய முறையான செயல்கள் எவையும் இவனிடம் இல்லை. பகலில் நன்கு உண்டு உறங்குவான். இரவில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு விலைமாதர் இல்லங்கட்குச் சென்று விடுவான். ஒரு மகனாக இருந்தபடியால் தாய் தந்தையர் முதலிலேயே ஒறுத்தடக்காது பொறுத்து நடந்து இவனை இவன் மனம் போனபடி விட்டுவிட்டனர்.

நாளடைவில் பொருள்கள் அழிந்தன. பகலெல்லாம் முயற்சியின்றி உறக்கத்தில் அமிழ்ந்தி யிருந்த இவனை மிடிதன் பிடிக்குட்படுத்தியது. மிகு விரைவாகவே இவனுடைய குடி அழிந்தொழிந்தது. குடியானது மடியினால் அடியோடு அழிந்துபோகும் என்பதை இவன் உலகுக்குணர்த்தினான்.

[மடி]

## 76. ஆதிமந்தியின் கதை

சோழன் கரிகாலனுக்கு ஆதிமந்தி என்னும் பெயருடைய மகள் ஒருத்தி யிருந்தாள். அவள் கல்வி கேள்விகளில் சிறந்தவள். அவள் தன்னுடைய கணவனாகிய சேரன் ஆட்டனத்தி என்பவனொடு கழார் என்னும் ஊரில் காவிரி யாற்றின் துறையில் நீராடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளுடைய கணவனைக் காவிரி நீர்ப்பெருக்கு அடித் துக்கொண்டு போய்விட்டது.



ஆதிமந்தி தன்னுடைய காதலனைப் பல பக்கங்களிலும் தேடினாள். எங்கும் காணவில்லை. "கல்லைப் போன்ற தோளை உடையவனே? எங்குச் சென்றாய்?" என்று கூவிக் கொண்டு கடற்கரைக்குச் சென்று அங்கு நின்றுகொண்டு புலம்பினாள். கடலானது இவளுடைய கற்புடைமைக்கு இரங்கியது. அவனைக் கரையோரத்திற்கு கொண்டுவந்து சேர்த்தது. அவன் கரையேறிய இடத்தில் மருதி என்பவள் நீராடிக் கொண்டிருந்தாள். அவள் சேரர் கோமானைக் கண்டு அழைத்துக்கொண்டு போய் ஆதிமந்தியிடம் சேர்த்தாள். கணவன் உயிர் மீட்ட கற்பரசியாகிய ஆதிமந்தி மிகுந்த களிப்படைந்தாள். கணவனைத் தழுவிக்கொண்டு தன்னுடைய இருப்பிடம் போய்ச் சேர்ந்தாள்.

மாதர் உரைசான்ற மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று கன்னவில்
தோளாயோ என்னக் கடல்வந்து முன்னிறுத்திக் காட்ட அவனைத்
தழீஇக்கொண்டு பொன்னங் கொடிபோலப் போதந்தாள்

[கற்புடைமை]

(சிலப்பதிகாரம்)

# 77. ஆதியந்தவுலாவாசு பாடிய கதை

சேரமான் பெருமாள் நாயனார் என்பவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் சேரநாட்டில் அரசாட்சி செய்து கொண்டிருந்தார். இவர், யார் எவ்விடத்திலிருந்து எது பேசினாலும் அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்ததோடு, பிற உயிர்த் தொகைகளின் ஒலிக் குறிப்பையும் உணர்ந்துகொள்ளும் ஆற்றலும் பெற்றிருந்தார். அதனால் இவருக்குக் 'கழறிற்றறிவார் ' என்னும் ஒரு பெயரும் உண்டு. இறைவன் அனுப்பிய வெள்ளை யானை மீது சுந்தரர் கைலைக் குப் புறப்பட்டார். புறப்பட்டவர் தம்முடைய நண்பரான சேரமானை எண்ணிக்கொண்டு சென்றார். செய்தியை உணர்ந்த சேரமான் தமது பக்கத்தில் நின்ற குதிரை யொன்றின் காதில் ஐந்தெழுத்தருமறையை ஓதினார். குதிரை சேரமானைச் சுமந்துகொண்டு விண் வழியாகக் கைலையை நோக்கிச் சென்றது. சுந்தரமூர்த்தியாரைக் கண்டு வணங்கி அவருடைய யானையை வலஞ் செய்துகொண்டு முன்னே சென்றார். குதிரை விரைவாக ஓடியபடியால் சுந்தரர்க்குமுன் கைலையை அடைந்தார். ஆனால் இறைவனுடைய கட்டளை இல்லாமல் சேரமான் சென்றதால் வாசலில் தடை பட்டு நின்றார். நின்ற காலத்தை வீணாகப் போக்காமல் இறைவன்மீது "திருக்கையிலாய ஞான உலா" என்னும் நூலைப் பாடினார். இவ்வுலா உலா நூல்களுக்கெல்லாம் முற்பட்டுத் தோன்றியபடியினால் ஆதியுலாவென்று பேர் பெற்றது. பிறகு இவ்வுலா இறைவன் திருமுன்பு அரங்கேற்றம் செய்யப்பட்டது. சேரமான் இதனை மிகு விரைவாகப் பாடிய படியால் இஃது ஆசுகவி என்னுமாறும் அமைந்தது.



"ஆதி அந்த உலா ஆசு பாடிய சேரர்"

(திருப்புகழ் )

(சேரமான் வரலாறு)

(ஞான உலா வரலாறு)

## 78. ஆபுத்திரன் கதை (1)

ஆபுத்திரன் என்பவன் சாலி என்னும் பெயருடைய அந்தணமாதின் மைந்தன். அருள் நிறைந்த உள்ளம் அமையப் பெற்றவன். இவனுக்குத் தெய்வத் திருவருளால் ஐயக்கடிஞை ஒன்று கிடைத்தது. அமுதசுரபி என்பது அதனுடைய பெயர். அவன் அவ்வேனத்தைக் கொண்டு உயிர்த் தொகைகளுக்கு உணவளித்துக் காப்பாற்றினான். இவன் உயிர்த் தொகைகளுக்குச் செய்த உதவி இந்திரனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவன் இவன்முன் வந்து "உன்னுடைய அருளுடைமை எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. நீ என்னோடு என்னுடைய உலகத்திற்கு வா என்று அழைத்தான். " ஈவாரையும் ஏற்பாரையும் பெறாத உன்னுடைய உலகம் மன்னுயிர்கட்கு என்ன பயனைச் செய்யும். அங்கு நான் வருதலை விரும்பவில்லை ” என்று கூறி இவன் மறுத்துவிட்டான்.



பிறர்க்கு உதவி செய்தல் என்னும் பெருநலம் உடைய வர்கள் அதனை விட்டு வேறு எதனையும் பெறுவதற்கு விரும்பார் என்பது இவனிடத்திலே நன்கு பெறப்பட்டது.

(மணிமேகலை)

(ஈதலின் பம்]

## 79. ஆபுத்திரன் கதை (2)

முன்னொரு காலத்தில் இவ்வுலகில் நீண்ட நாள் மழை பெய்யவில்லை. அதனால் உயிர்த் தொகைகள் பசி நோய் மிகப் பெற்று வாடி வருந்தின. அந்நாளில் ஆபுத்திரன் பசி நோயால் வாடப்பெற்ற உயிர்கட்கு உணவு வழங்கினான். அவ்வாறு வழங்குதற்கேற்ற தெய்வத் தன்மை யமைந்த ஏனம் ஒன்றும் இவனுக்குக் கிட்டியது. அதனால் இவன் உயிர்த் தொகைகளின் பசியை நீக்கி மகிழ்வுடன் இருத் தலைத் தேவர்கோன் உணர்ந்தான்.


ஆபுத்திரனிடம் வந்து அன்பனே! உன்னுடைய அருளு டைமைக்கு



மகிழ்ந்தேன். என்னுடைய தேவ உலகிற்கு வரு வாயாக" என்று அழைத்தான். இவன் மறுத்தான். அதனால் சினங்கொண்ட இந்திரன் தன்னுலகு சென்றான். யாண்டும் மழைபொழிந்து வளஞ் சிறக்கச் செய்தான். அவ்வாறாகவே உலகில் பசித்தவர் இலராயினர். வேறொன்றையும் உதவாமல் நீர் ஒன்றையே உதவிப் பசி நோயைப் போக்கடித்து இந்திரன் மகிழ்ந்தபடியால் நீரே இவ்வுலகத்திற்குச் சிறந்த அமிழ்தம் என்று அனைவரும் அறிந்துகொண்டனர். (மழையின் சிறப்பு (மணிமேகலை)

## 80. ஆப்பசைத்த குரங்குக் கதை

ஓரிடத்திலே பெரிய மரம் ஒன்றை வெட்டி அதனைட் பலகை யறுத்துக்கொண்டிருந்தார்கள். மரத்தை வாள் கொண்டு அறுத்த தச்சர்கள் ஒரு நாள் நண்பகலில் உணவ கொள்வதற்காகத் தம்முடைய



இல்லத்திற்குச் சென்றனர். செல்லும்பொழுது பாதி யறுக்கப்பட்டிருந்த மரத்தின் பிளட் பில் பெரிய முளையை வைத்து அடித்துவிட்டுச் சென்றனர் அவ்வாறு அடித்தால் மரம் ஒன்று சேர்ந்து பிடித்துச் கொள்ளாமல் பிளவாகவே நிற்கும். பிறகு வாளைச் செலுத்தி அறுப்பதற்கு எளிதாகவிருக்கும். மரம் அறுக்கும் தச்சா கள் சாப்பிடச் சென்ற பிறகு பக்கத்து மரங்களில் வாழ்ந் திருந்த சில குரங்குகள் அவ்விடத்திற்கு வந்தன. அவை களாற் சும்மா இருக்க முடியவில்லை. ஒரு குரங்கு மரத்தின் அறுத்த பிளப்புக்குள் உட்கார்ந்து கொண்டு ஆப்பைப் பிடித்து அசைத்துப் பிடுங்கியது. ஆப்பு அசைந்து தளர்ந்து விழவே மரம் ஒன்றாகச் சேர்ந்து நெருங்கியது. உள்ளே அகப்பட்டுக் கொண்ட குரங்கு அப்பொழுதே நசுங்கிச் செத்துப்

போய்விட்டது. வீணான வேலையில் தலையிடுகிறவர்கள் தப்பாமல் தங்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளுவார்கள்.

"ஆப்பசைத்த குரங்கதனைப் போல" [வீண் தொல்லையிற் சிக்குதல்]

(பட்டினத்தார்)

## 81. ஆயர்களுக்குப் பரமபதங் காட்டிய கதை

நந்தகோபர் யமுனை யாற்றில் நீராடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஓர் அசுரன் நந்தகோபரை வருண லோகத் திற்குக் கொண்டுபோய் ஒளித்தான். இதனைக் கண்ணன் உணர்ந்தான். அங்குச் சென்று நந்தகோபரை மீட்டுக் கொண்டு வந்தான். இதனையறிந்த கோபாலர்கள் தாங்கள் பரம பதத்தைப் பார்க்க விரும்பினார்கள். இச்செய்தியைக் கண்ணனிடம் கூறினார்கள். தன்னை வழிபட்டு நல்ல கதியை அடைய விரும்பிய கோபாலர்கள் அனைவருக் கும் கண்ணன் அறிவுக் கண்ணைக் கொடுத்தான். தனது மேலான வடிவத்தையும் பரமபதம் முதலிய நல்லுலகங்களையுங் காட்டினான்.



(கண்ணன் பெருமை]

(பாகவதம்)

## 82. ஆயின் கதை

ஆய் என்பவன் பொதிய மலைக்கு அண்மையில் ஆய் குடி என்னும் ஊரிலே அந்நாளில் வாழ்ந்திருந்தான். இவன் பிறர்க்கு நன்கொடை வழங்கி உதவி செய்வதிற் புகழ் மிகப் பெற்றிருந்தான். இவனுடைய புகழ் யாண்டும் பரவி நின்றது. கடைவள்ளல்கள் ஏழு பேர்களில் இவன் ஒருவன்.



இவனுடைய கொடைத் திறத்தினை வியந்து அக் காலத்துப் புலவர்கள் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். ஈதல் இன்பத்தையே இனிய பேரின்பமாகக் கொண்ட இவனை எதிர்த்துப் போர் செய்து வெற்றிகொள்ள வேற்றரசர்கள் முயன்றார்கள்.அறமே துணையாக நின்றபடியால் இவனை பாதுஞ் செய்ய முடியவில்லை.

இவனுக்குப் பொருள் பலவற்றைக் கொடுத்துக் கெடுக்கப் பார்த்தார்கள் சிலர். ஆனால், இவன் பொருளிடத்திலே அவாவற்றவனாக அமைந்து நின்றான். இவனுடைய செல்வம் பிறருக்குக் கொடுத்தலால் குறைவை அடையவில்லை; நாளும் பெருகிக் கொண்டே யிருந்தது. செல்வங் குறையாமல் சிறந்து பெருக வேண்டுமானா பிறருடைய பொருளை விரும்பாமல் இருத்தல் வேண்டும் அவ்வாறிருந்தால் செல்வம் பெருகிச் சிறப்பினை யளிக்கும் என்பதற்கு இவன் தக்க சான்றாக அமைந்தான்.

(கொடைச் சிறப்பு)

(சங்க நூல்கள்)

## 83. ஆரந்தாங்கு பாண்டியன் கதை



இவனுடைய இயற் பெயர் உக்கிரகுமார பாண்டியன். "இவன் முருகக் கடவுளுடைய ஒரு கூறாக இந்நிலத்தில் தோன்றியவன். இவன் பேரழகு மிக்கானாய்ச் சிறந்து மதுரைமா நகரிலே அரசு புரிந்துகொண்டிருந்தான்.

இவன் ஒரு சமயம் தேவருலகத்திற்குச் சென்றான் இந்திர னோடு இவனுஞ் சரிநிகர் சமானனாய் அமர்ந்திருந்தான். இவன் இவ்வாறு அமர்ந்திருந்தது இந்திரனுக்கு மிகுந்த பொறாமையை உண்டாக்கிற்று. மன்னவன் ஒருவன் இங்ஙனம் விண்ணகம் புகுந்து நம்மோடு சரி நிகர் சமானனாய் இருக்கையில் அமர்ந்தானே என்று எண்ணி உள்ளம் புழுங்கினான். வஞ்சகமாகத் தொலைக்க வேண்டும் இவனை என்று நெஞ்சகத்தில் முடிவு செய்தான்.

பல ஆயிரக் கணக்கான பேர் சேர்ந்து தூக்கக்கூடியதும் ஒருவருடைய



கழுத்திலே அணிந்தால் அவர்களை அழுத்தி நெரித்துக் கொன்றுவிடக் கூடியதுமாகிய ஓர் அழகிய மணிமாலையைக் கொண்டு வந்து அவனுக்கு அணி வியுங்கள் என்று மறைமுகமாகத் தன்னுடைய ஏவலர்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்களும் அவ்வாறே கொண்டு வந்து இவனுடைய கழுத்திலே போட்டார்கள். உக்கிர குமார பாண்டியன் இந்திரன் எண்ணியபடி சுமை தாங்க முடியாமல் இறந்து போகவில்லை. பொதுவான ஒரு மாலையை அணிந்து கொண்டவனைப்போல் எவ்வித வருத்தமும் அற்றவனாக இருந்தான்.

இதனால் இவனுக்கு ஆரந்தாங்கு பாண்டியன் என்னும் காரணப் பெயரும் உண்டாயிற்று. மதுரை மேல் வந்த கடலை அடக்கினான். சந்திரகுல மன்னர்களை இழித்துக்கூறிய இந்திரனுடைய தலையையும் அறுக்க முனைந்தான். அறம் ஆண்மை பெருமை எல்லாம் உடையவனே சிறந்த அரசன் என்பதற்குச் சரியான எடுத்துக் காட்டாக இவன் அமைந்திருந்தான்.

[அரசரிற் சிறந்தவன்] (திருவிளையாடற் புராணம்)

## 84. ஆரியன் கதை



முன்னாளில் ஆரியன் என்னும் பேருடையவன் ஒருவன் இருந்தான். இவன் அரசமரபில் தோன்றியவன். இவனுக்கு அண்ணன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் இராசசூரன். முறைப்படி இவன் அரசனானான். தன் தம்பியை அவன் ஒரு பொருட்படுத்தவில்லை. சிறிதும் அன்பில்லாமல் நடந்து கொள்ளவே அவனுடைய நாட்டில் இருப்பதற்கு இவன் விரும்பவில்லை. புறப்பட்டு வேறோர் இடத்திற்குச் சென்றான். அவ்விடம் காடாக இருந்தது. அங்கு வேடர்கள் பலர் வாழ்ந்திருந்தார்கள். இவன் தன்னுடைய அறிவினாலும் ஆற்றலினாலும் அவர்களை யெல்லாம் தன் வழிப்படுத்தினான். காடாக இருந்த இடத்தை நாடாக மாற்றினான். தான் அந்நாட்டிற்கு அரசனாக அமர்ந்து ஆட்சியை மேற்கொண்டான்.

தன்னுடைய செல்வத்தை இழந்தும் தன்னுடைய ஊக்கத்தினாலேயேதான் இவன் அரசனாயினான். உறுதியான ஊக்கமுடையவர்களாக இருப்பவர்கள் நாம் செல்வத்தை இழந்துவிட்டோம் என்று வருந்தமாட்டார்கள் என்பது இவனிடத்தில் நன்கு பெறப்பட்டது.

ஊக்கமுடைமை]

# 85. ஆலங்காட்டில் ஆடிய கதை



தொண்டைவள நாட்டில் திருவாலங்காட்டில் நிம்பன் சும்பன் என்னும் பெயருடைய இரண்டு அசுரர்கள் இருந்தார்கள். அவர்கள் மிகுந்த ஆணவங்கொண்டு முனிவர்கள் சித்தர்கள் மனிதர்கள் தேவர்கள் முதலிய யாவருக்குந் தொல்லை விளைவித்துக்கொண்டு திரிந்தார்கள். நாரதர் முதலிய தேவர்கள் பரமசிவனிடம் முறையிட்டுக்கொண்டார்கள். இறைவன் தம்முடைய நெற்றிக் கண்ணில் இருந்து காளியை உண் டாக்கி அசுரர்கள் இருவரையும் அழித்தொழிக்கச் செய்தார்.

அழித்தொழித்த காளியானவள் ஆணவங்கொண்டு அவ்வசுரர்களைப் பார்க்கிலும் மிகுதியான தீமையைச் செய்யத் தொடங்கினாள்.

இறைவன் பூதகணங்கள் புடைசூழத் திருவாலங்காட் டிற்கு வந்தார். பெண்ணாகிய காளியோடு போர் செய்யக்கூடாதென்று கூத்தாடத் தொடங்கினார். கோசுகோட்டி என்னும் ஆடலை ஆடினார். காளியும் அக்கூத்தை ஆடத் தொடங்கி இறைவனுக்குச் சரியாக ஆடினாள். சரியாக ஆடியபடியால் ஆணவமுங் கொண்டாள். இறைவன் ஒரு திருவடியை நிலத்தில் ஊன்றிக்கொண்டு ஒரு திருவடியை விண்ணில் தூக்கி ஆடினார். அவ்வாறு ஆடுதற்கு நாணிய காளி இறைவனுக்குத் தோற்றாள்

(இறைவன் ஆடல்]

## 86. ஆலஞ்சேரி அயிந்தன் கதை

ஆலஞ்சேரி என்னும் ஊரில் முன்னாளில் அயிந்தன் என் னும் பெயருடையவன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் உயர்ந்த குடியிற் பிறந்தவன். சிறந்த அறிவும் பரந்த செல்வ மும் அமையப் பெற்றவன். அருள் நிறைந்த நெஞ்சினனாகிய இவன் தன்னுடைய பொருளை அறவழியில் செலவு செய்து நாளும் நல்வினையைத் தேடிக்கொண்டிருந்தான். அதனால் *இவனுடைய புகழ் எண்டிசையினும் மண்டி நின்றது. அந்நாளில் பாண்டிவள நாட்டில் பருவமழை சரியாகப் பெய்ய வில்லை. கதிரவன் கொடுமை மிகக் கடுமையாக இருந்தது. குளம் ஏரி முதலிய நீர் நிலைகள் காய்ந்து தரை வெடிக்கலாயின.



பசிக் கொடுமை எங்கும் மிகுந்துவிட்டது. உறவினர்கள் ஒருவரையொருவர் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. பாண்டிய மன்னனுடைய ஆதரவில் தங்கியிருந்த. சங்கப் புலவர்கட்கும் தொல்லை உண்டாயிற்று. பாண்டிய மன்னன் புலவர்களைப் பார்த்து, " நீங்கள் செழிப்புள்ள நாட் டுக்குச் சென்று தங்கியிருந்து இந்நாடு இனிது செழித்தபின் திரும்பி வாருங்கள் " என்று கூறினான். சங்கப் புலவர்கள் ஆலஞ்சேரி அயிந்தனுடைய தன்மையையும் வண்மையை யும் நன்கு உணர்ந்திருந்தார்க ளாதலின் இவனிடம் வந்து தங்கியிருந்து நாடு செழித்த பின் திரும்பிச் சென்றனர்.

(ஆலஞ்சேரி அயிந்தன்]

(சங்ககாலச் செய்தி)

## 87. ஆலத்தூர் கிழார் கதை



ஆலத்தூர் கிழார் என்பவர் சோழ வளநாட்டிலே ஆலத்தூர் என்னும் ஊரில் முன்னாளில் வாழ்ந்திருந்தார். பெரும் புலமையும் அரும் பண்புகளும் அமையப் பெற்றவர். செய் யுள் செய்வதில் வல்லவர். இவர் காலத்தில் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவன் இவருடைய அரும் புலமையையும் பெரும் பண்பையும் அறிந்தான்.- இவரிடத்தில் மிகுந்த நண்பு கொண்டான். இவரும் அவனோடமர்ந்து ஆவன கூறி உறுதி பயக்கும் அறிவுரைகளைத் தெளிவு பெற வழங்கினார். இருவரும் சிறந்த நண்பர்களாக விளங்கியிருந்தனர்.

ஒருகால் மற்றோர் அரசனுக்கும் கிள்ளி வளவனுக்கும் பகை மூண்டது. அப்பகைவன் புறங்காட்டி யோடி ஓரிடத் திற் புகுந்து மறைந்து கொண்டான். கிள்ளி வளவன் அம்மன்னன் புறங்காட்டி அஞ்சியோடிப் பதுங்கிய பொழுதும் அவனை விடாது வளைத்துப் பொருது தொலைக்க முயன்றான். அஞ்சிப் புறங்காட்டி யோடிய அவனைத் தொடர்ந்து வளைத் தல் கூடாது என்று இவர் அறிவுரை கூறினார். முதலில் அரசன் இவர் கூறியதைப் பொருட்படுத்தாமல் அவனைத் தொலைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். இப் புலவர் விடாமல், "நீ அவ்வாறு செய்தால் பழிக்கும் பாவத் திற்கும் உள்ளாவாய்" என்று இடித்துரைத்தார். அவனும் தன்னுடைய தவற்றினையுணர்ந்து திருந்தினான். " ஒருவ ரொடு நட்புக் கொள்ளுதல் அவர்கள் தீய வழியிற் செல்லும் போது இடித்துரைத்து நல்வழியில் திரும்புமாறு செய்தற்கே யல்லாமல் அதனைக் கண்டு மகிழ்தற் பொருட்டன்று என்பதை அனைவரும் இவர்பால் உணர்ந்தனர்.

(சங்க நூற் செய்தி)

(நட்புக் கொள்ளுதல்)

## ௪௪. ஆல் இலையில் அமருங் கதை



நான்முகன் முதலிய எல்லாத் தேவர்களும் அழிந்தொழிகின்ற ஊழிக் காலத்தில், திருமாலானவர் அண்டங்களை யெல்லாம் தன் வயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறு குழந்தையின் உருவத்தை எடுப்பார். ஆதிசேடனது கூறான ஓர் ஆலிலையின் மீது பள்ளிகொண்டு அறிதுயிலில் அமர்ந்து அருளுவார். மறுபடைப்பு நிகழுங் காலத்தில் எல்லாவற்றை யும் வெளிப்படுத்துவதோடு தாமும் திருப்பாற்கடலை அடைவார். ஆதிசேடனும் அழிந்தொழிகின்றபடியால் ஆதிசேடனின் கூறான ஆலிலையில் பள்ளி கொள்ளுகின்றார் என்பர்.

[ஆலிலையிற் பள்ளி]

## 89. ஆழிப்படை தோற்ற கதை

ததீசி முனிவர் பிருகுவின் மரபில் சியவன முனிவருக்குப் புதல்வராகத் தோன்றினார். நான்முகனுடைய தும்மலில் தோன்றிய குபன் என்னும் அரசனோடு இவர் நட்பாக இருந்தார். ஒருநாள் முனிவருங் குபனும் உரையாடிக் கொண் டிருந்தார்கள். அப்பொழுது அந்தணர்கள் உயர்ந்தவர்களா அரசர்கள் உயர்ந்தவர்களா என்று வேடிக்கையாகப் பேச்சு நி கழ்ந்தது. அந்தணர்களே சிறந்தவர்கள் என்று ததீசி முனிவர் கூறினார். அந்தணர்களைப் பார்க்கினும் அரசர்களே சிறந்தவர்கள் என்று குபன் கூறினான். இதனால் பெருங்கலாம்' விளைந்தது. ததீசி முனிவர் வெகுண்டு குபனை அடித்தார்.. குபன் வச்சிரப் படையை எடுத்துக்கொண்டு ததீசி முனிவரை இரண்டு துண்டாக்கினான். ததீசி முனிவர் தம்முடைய நண் பனாகிய சுக்கிரனை நினைத்துக் கொண்டே கீழே வீழ்ந்து இறந்தார்.



சுக்கிரன் நடந்த செய்தியை உணர்ந்து வந்தான். ததீசி முனிவருடைய உடலைப் பொருத்தி உயிர் உண்டாகச் செய் தான். காஞ்சீபுரத்தை அடைந்து சிவ வழிபாடு செய்து. வச்சிரயாக்கை பெறுமாறு கூறினான். முனிவர் அவ்வாறே வழிபட்டு அழியாத வச்சிரவுடலைப் பெற்றார். மீண்டும் அரச னுடைய அவையை அடைந்து குபனுடைய தலையை இடது. காலால் உதைத்து உருட்டினார். குபனுக்குப் பரிந்துகொண்டு திருமால் வந்தார். தம்முடைய ஆழிப் படையை ஏவினார். ஆழிப் படை வாய் மழுங்கித் தேய்ந்தது; இதனால் திருமால் புறங்கொடுத்தோடினார்.

"திருமறு மார்பன்முன் செய்யவென்றொழும் புரமுறு ததீசியால் ஒடிந்த நேமியான் பொருமற மிழந்தனன்....

(முனிவருந் தேவரும்)

(சித்தாந்த சிகாமணி ).

## 90. ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடிய கதை

சுந்தரமூர்த்தி நாயனார் திருமுதுகுன்றத்தையடைந்து இறைவனைப் பாடினார். இறைவன் பன்னிராயிரம் பொன் வழங்கி யருளினார். சுந்தரர் இறைவனைப் பார்த்து, "திருவாரூரிலே உள்ள மக்கள் வியப்படையுமாறு இப்பொன் அங்கே வருமாறு திருவருள் செய்யவேண்டும் " என்று




வேண்டிக்கொண்டார். இறைவர், "இப்பொன்னை மணிமுத் தாற்றிலே இட்டுத் திருவாரூர்க் குளத்திலே எடுத்துக்கொள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். சுந்தரர் அப்பொன்னின் உரையறிய மச்சம் வெட்டி வைத்துக்கொண்டு மணிமுத்து ஆற்றிலே போட்டார். பல சிவப்பதிகளையும் போற்றி வழி பட்டுக்கொண்டு திருவாரூரை அடைந்தார். பரவையார் மாளிகைக்குச் சென்று தங்கினார். பிறகு ஒருநாள் பரவையாரைப் பார்த்துத், . “திருமுதுகுன்றத்தில் பழமலைநாதர் எனக்குக் கொடுத்த பன்னீராயிரம் பொன்னையும் மணிமுத்து ஆற்றிலே போட்டு வந்தேன். அப்பொருள் இறைவன் திரு வருள் இயக்குதலால் இவ்வூர்த் திருக்குளத்திற்கு வந்திருக் கும் அதனை எடுத்துக்கொண்டு வருவோம் வா” என்று கூறிப் பரவையாரையும் அழைத்துக்கொண்டு திருக்கோயிலுக்கு மேல்புறம் உள்ள பெரிய குளத்திற்குச் சென்றார். வடகிழக்கு மூலையில் ஓரிடத்தில் இறங்கித் தண்ணீருக்குள் தடவிப் பார்த் தார். இவர் பதிகம் பாடாதபடியினால் இறைவன் பொன் இவருடைய கைக்கு அகப்படாமல் செய்தார். இதனால் திகைப்படைந்த சுந்தரர் ஒன்றுந் தோன்றாமல் விழித்தார். சுந்தரருடைய திகைப்பைக் கண்ட பரவையார், "ஆற்றிலே போட்டுவிட்டுக் குளத்திலே தேடுகிறீரா?” என்று கேட்டு நகை செய்தார். சுந்தரர் இறைவனை நோக்கிப் பதிகம் பாடி னார். அதன் பிறகு பொன் கிடைத்தது.

"கொங்குரை ஆற்றிலிட்டுக் குளத்தினில் தேட நீடும்" [இறைவன் திருவிளையாடல்]

(மதுரைக் கலம்பகம்)

## 91. ஆற்றூர்க் கிழான் கதை

தொண்டைவள நாட்டிலே ஆற்றூர் என்னும் ஊரிலே முன்னாளில், ஆற்றூர்க் கிழான் என்னும் வேளாளச் செல்வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இச்செல்வனிடம் பொருள் மிகுதியாக அமைந்திருந்தது. இவனிடம் யாரேனும் நன்கொடை பெறுவதற்குச் சென்றால் தன்னுடைய செல்வச்சிறப்புக்குத் தக்கவாறு கொடுப்பானேயல்லாமல் கேட்டவர்கள் கேட்ட அளவில் எதனையுங் கொடுக்கமாட்டான். இச்செல்வன் வாழ்ந்திருந்த காலத்தில் கூற்றூர் என்னும் ஊரில் புல வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவனுக்குக் குதிரை ஒன்று வேண்டியதாக இருந்தது. செல்வன் மீது செய்யுள் ஒன்று செய்துகொண்டு போய்க் கேட்டான். தன்னுடைய செல்வப் பெருக்கிற்கு ஒரு குதிரையைக் கொடுத்தல் தக்கது அன்று என்று எண்ணிய ஆற்றூர்க் கிழான் அப்புலவனுக்கு ஆயிரம் குதிரைகளை நன்கொடையாக வழங்கினான். இதனால் இச்செல்வனுடைய கொடைநலம் எல்லா இடங்களிலும் பரவியதோடு இவனுடைய புகழும் நீண்ட காலமாக உலகத்திலே நிலைபெறுவதாயிற்று. தங்களுடைய பெருமைக்கு ஏற்பக் காரியங்களைச் செய்து சீர்த்தி பெற்றோர் இவ்வுலகிற் பலராவர்.



தொண்டை மண்டல சதகம்]

(கொடைச் சிறப்பு)

# 92. ஆனைமுக அவுணன் கதை

கசமுகாசூரன் என்பவன் யானை முகம் அமையப் பெற்றவன் ; மிகப்பலம் பொருந்தியவன். இவன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மிகுந்த தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். இந்திரன் முதலிய தேவர்கள்



இந்த அவுணனைக் கொன்று எங்களுடைய துன்பத்தைப் போக்கியருள வேண் டும் என்று ஆனைமுகக் கடவுளை வேண்டிக் கொண்டனர். ஆனைமுகக் கடவுள் தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார். போருக்குச் சென்று அந்த அவுணனை எதிர்த்துப் போரிட்டார். தம்முடைய தந்தம் ஒன்றை முறித்து அவுணன்மேல் வீசினார். அஃது அவனுடைய மார்பைக் கிழித்தது. அவன் இறந்தொழிந்தவன் போலானான். தனது உடலை விட்டு ஒரு பெருச்சாளியாகிப் பிள்ளையாரைத் தாக்க வந்தான். பிள்ளையார் அதன் முதுகின்மேல் தாவி ஏறினார்.

என்னை எப்பொழுதும் இவ்வாறே சுமந்துகொண்டிருப்பாயாக " என்று கட்டளையிட்டார். அவனும் அவ்வாறே சுமக்கலானான்.

"கசமுகத்தவுணனைக் கடியானை"

(புராணக் கதை )

[பெருச்சாளி ஏறியது

# 93. ஆனைமுகன் ஆறுமுகன் கதை

சிவபெருமானிடத்திலே பகை கொண்ட தக்கன் வேள்வி யொன்றைச் செய்யத் தொடங்கினான். அவ்வேள்வியை அழிக்குமாறு சிவபெருமான் விநாயகரை அனுப்பினார். விநாயகர் பெருச்சாளி ஊர்தியில் ஏறிக்கொண்டு பதினான்கு உலகங்களும் நடுங்கும்படியான மிகுந்த சினத்துடனே தக்கன் வேள்விச்சாலையை நோக்கி வந்தார். தக்கனும் தேவதை களும் இச்செய்தியை உணர்ந்தார்கள். அவர்கள் விநாயகரைத் தடுக்க ஒரு சூழ்ச்சி செய்தார்கள். அவர் வருகிற வழியில் அளவில்லாத பலகார வகைகளையும் கனி வகைகளையும் மலைபோலக் குவித்து வைத்தார்கள்.



வேள்வியை அழிக்க வந்த விநாயகர் அவைகளைக் கண் டார். ஊர்தியைவிட்டுக் கீழேயிறங்கினார். அவைகளை உண்ணத் தொடங்கினார். இதனை அறிந்த சிவபெருமான் தக்கன் வேள்வியை அழிப்பதற்குச் சுப்பிரமணியரை அனுப்பினார். அவர் மயிலூர்தியில் ஏறிக்கொண்டு மிகுந்த சினத்தோடு வந்தார். தக்கனும் வேள்விக்கு வந்திருந்த தேவர் களும் கலந்து பேசிச் சுப்பிரமணியர் வருகிற வழியில் தேவமாதர்கள் பலரை அனுப்பிக் கூத்தாடச் செய்தார்கள். அக்கூத்தைச் சுப்பிரமணியர் பார்த்துக்கொண்டு நின்றுவிட் டார்.

இதனால் சிவபிரானுக்கு மிகவும் சினம் உண்டாயிற்று. அந்தச் சினத்திலிருந்து வீரபத்திரர் தோன்றினார். அவ்வீரபத்திரரைச் சிவபெருமான் வேள்வியழிக்க அனுப்பினார். வீர பத்திரர் வருகிற விரைவைக் கண்டு சுப்பிரமணியர் மயில் மீது ஏறி வீரபத்திரக் கடவுளுடைய கைக்கு எட்டாமல் ஓடிப் போனார். விநாயகர் பழங்களையும் பலகாரங்களையும் கண்ட படி தின்றுவிட்டபடியால் வயிறு மிகவும் பருத்துவிட்டது. அவரால் எங்கும் ஓடமுடியவில்லை. வீரபத்திரர் முதலில் விநாய கருடைய தலையை அறுத்து வேள்விக் குழியிற் போட்டார். பிறகு தக்கனுடைய வேள்வியை அழித்தார். பிறகு இறந்தவர்களை எழுப்பும்போது

விநாயகருடைய உடலில் யானைத் தலையை வைத்து ஒட்டியெழுப்பினார்.

“அனியாயத் தக்கன் மகம் அழிக்க வந்த கணபதிபட் சணத்துக் காசை தோணியுண்டங் கிருந்தல்லோ காரியங்காட் டாமல்முகம் தும்பி யானான் "

(செயங்கொண்டார் வழக்கம்)

(தக்கன் வேள்வி]

## 94. இசைக்கு உருகிய கதை

தாம் இசைப் பயிற்சியில் சிறந்துள்ளதாக நாரதருக்கு மிகுந்த செருக்குண்டாகியது. திருமால் நாரதருடைய செருக்கை யொழிக்க



எண்ணினார். அப்பொழுது ஆஞ்சநேயர் மேருமலையில் தவஞ்செய்து கொண்டிருந்தார். திருமால் வேறொரு காரியத்தைக் குறிப்பிட்டு நாரதரை ஆஞ்ச நேயரிடம் அனுப்பினார். ஆஞ்சநேயர் நாரதருடைய மகர யாழை வாங்கி மேகராகக்குறிஞ்சி என்னும் பண்ணைப் பாடினார். மேருமலை உருகியது. வீணையைக் கீழே வைத்து அஃது இறுகியபின் இசை பாடி அவ்வீணையை எடுத்துக் கொள்ளுமாறு ஆஞ்சநேயர் கூறினார். நாரதர் இசை பாடி மலையை உருகச் செய்து வீணையை எடுக்க முடியாமல் தோற்றார். ஆணவமும் அடங்கியது.

இவ்வாறே அகத்தியருக்கும் இராவணனுக்கும் இசைப் போட்டி ஒன்று நிகழ்ந்தது. இராவணன் பொதிய மலையில் திரிந்து அல்லல் பல செய்தான். அவனை விரட்ட எண்ணி அகத்தியர் இராவணனை அழைத்து, "நாம் இருவரும் இசை பாடுவோம். இசையில் வென்றோரே இங்கிருத்தற்குரியர் நீ உன்னுடைய வீணையைக் கீழே வை. நான் இசை பாடு கிறேன். அவ்விசையால் பொதியமலை உருகி உன்னுடைய வீணையைப் பிடித்துக் கொள்ளும். அஃது இறுகிய பின் ‌இசை பாடி மலையை உருகச் செய்து வீணையை எடுத்துக் கொள். அவ்வாறு உருகச் செய்து வீணையை எடுத்துவிட் டால் நான் இவ்விடமிருந்து வேறிடஞ் சென்று விடுகிறேன். அவ்வாறு பாடி எடுக்க முடியவில்லை யென்றால் நீ இங்கிருந்து வேறிடம் போய்விட வேண்டும்" என்று கூறினார். அகத் தியர் கூறியதற்கு

இராவணன் இணங்கினான். முதலில் அகத்தியர் இசை பாடினார். இராவணன் தனது வீணையை மலையில் வைத்தான். மலை உருகி வீணையைப் பிடித்துக் கொண்டது. பிறகு இராவணன் இசை பாடி மலையை இளகச் செய்து வீணையை எடுக்க முயன்றான். எவ்வளவோ உருக்க மாகப் பாடியும் மலை உருகவில்லை. முன் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி இராவணன் பொதிய மலையில் சுற்றித் திரியாமல் இலங்கைக்குச் சென்று விட்டான்.

"பொதியமால் வரைபோல் இசைக்குரு காதிம மலையின் " [இசைச் சிறப்பு]

(சோணசைல மாலை)

## 95. இசை வாது வென்ற கதை

மதுரைமா நகரில் இராச இராச பாண்டியன் என்பவன் அரசியற்றிக் கொண்டிருந்தான். அவனுடைய காதற் கிழத்தி யரில் ஒருத்திக்கும் பாணபத்திரனுடைய மனைவிக்கும் இசையி னால் பகை உண்டாகியது. அரசனுடைய காதற் பரத்தை நன்கு இசை பாடும் பாடகி ஒருத்தியைக் கொண்டு பாணபத் திரனுடைய மனைவியின் செருக்கை அடக்க வேண்டுமென்று எண்ணினாள். தன்னுடைய எண்ணத்தைப் பாண்டிய னுக்குத் தெரிவித்தாள். அவன் ஈழ நாட்டில் இருந்து பாடகி ஒருத்தியைத் தருவித்தான். ஈழத்துப் பாடகியும் பாணபத்திரனுடைய மனைவியும் இசை பாடினார்கள். அரசன் நடு நிலை பிறழ்ந்து, " ஈழத்துப் பாடகியே வென்றாள்" என்று கூறினான். மற்றொரு நாளும் இசைப் போர் நடந்தது. அன்று மதுரைக் கடவுள் தாமும் ஒரு புலவராக அவ்வவை பில் வந்து அமர்ந்திருந்தார். இருவரும் இசை பாடினர். அரசன் ஈழத்துப் பாடகியைப் புகழ எண்ணினான். ஆனால், சோமசுந்தரக் கடவுள் பாணபத்திரனுடைய மனைவியின் இசையே மிகச் சிறந்தது என்று பாராட்டிப் பேசினார். இறைவனுடைய திருவருளால் அரசனுடைய மனக் கோணலும் தீர்ந்தது. பாண்டியனும் பாணபத்திரன் மனைவியைப் புகழ்ந்து பாராட்டி நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச் செய்தான். இறைவன் ஆடல்]



(திருவிளையாடற்புராணம்)

## 96. இடப் பாகம் பெற்ற கதை

உமாதேவி இறைவனுடைய வடிவத்தில் இடப் பாகத் தைப் பெற விரும்பினாள். அதன் பொருட்டு இறைவனைக் குறித்து நெடுங்காலந் தவஞ் செய்தாள். இறைவன் உமா தேவியின் தவத்திற்கு இரங்கினார்.



உமை முன் தோன்றினார். உன் விருப்பப்படியே இடப் பாகங் கொடுக்கிறேன்" என்றுகூறி உமையை இடப் பாகத்திற் சேர்த்துக் கையினால் அணைத்துக்கொண்டார். இருவர் உடலும் ஒன்றாகியது. ஒரு பக்கத்தில் சிவந்த சடையும், ஒரு பக்கத்தில் கரிய கூந்தலும், ஒரு பக்கத்தில் கொன்றை மாலையும், ஒரு பக்கத்தில் வேறு மலர் மாலையும், ஒரு பக்கத்திற் சூலமும், ஒரு பக்கத் தில் கருங்குவளை மலரும், ஒரு

பக்கத்தில் வீரகண்டாமணியும், ஒரு பக்கத்தில் சிலம்பும், ஒரு பக்கத்தில் பவள நிறமும், ஒரு பக்கத்தில் பச்சை நிறமும் உண்டாயின. இவ்வாறு தேவி இடப் பாகத்தில் ஒன்றிய தன்மையை, "பாதிமாதுடனான பரமன் " என்றுங் கூறுவர்.

"பாகம் பெண்ணுருவானாய் போற்றி"

புராணக் கதை]

(திருவாசகம் )

## 97. இடவகன் கதை

இடவகன் என்பவன் எதையும் நன்கு ஆர அமர எண்ண மிட்டுப் பேசுவானே யன்றி மனம் போனவாறு பேசிவிடமாட் டான். பேசுவதை நன்கு எண்ணி அவ்வாறு பேசுவதில் தவறு யாதும் இல்லை என்பதை நன்கு உணர்ந்த பின்னரே தான் பேசுவான். இவனுடைய இத்தகைய



பண்பாட்டால் நன்மைகள் பல இவனுக்கு ஏற்படலாயின. உதயணன் என்பவன் இவனது குணநலத்தை உணர்ந்து தனக்கு அமைச் சனாக

அமைத்துக் கொண்டான். இவன் அமைச்சனான பிறகு உதயணனுக்கு நன்மைகள் மேலும் வளர்ந்தன ஆகவே, அவன் இவனுக்கு ஊர்கள் பலவற்றை உதவித் தல போல் ஓர் அரசனாக விளங்குமாறு செய்தான். ஒருவருக்கு. நன்மையும் தீமையும் அவர்கள் சொல்லும் சொல்லாலேயே. உண்டாகின்றன. ஆகவே, சொல்லின்கண் எத்தகைய தளர்ச்சியும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

(சொற்சோர்வு காத்தல்)

(பெருங்கதை'

## 98. இடைக்காடர் கதை

இடைக்காடர் என்பவர் யாதவ குலத்தில் தோன்றியவர்- நூல்களைக் கற்றுச் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார். காலக் கணிதத்தினும் வல்லவர். வருடாதி நூல் முதலியன இவர் செய்த காலக் கணித நூல்களே. ஒரு காலத்தில் பன்னிரண்டு யாண்டுகள் வரை மழை



பெய்யாதென்பதை இவர் தெரிந்துகொண்டு சூழ்ச்சியாக வாழ்க்கையை

மேற்கொண்டார். ஆடுகளுக்குப் பசும் புல்லும் தண்ணீரும் அகப்படா வென்பதை அறிந்துகொண்டு உமிரியிலை தின்னவும் கடல் நீர் குடிக்கவும் அவைகளைப் பழக்கி யிருந்தார். தாமும் வரகைத் தொகுத்து வைத்துக்கொண்டு அதனையுண்டு வாழ்ந்தார். மழை பெய்யாவிடின் பசும் புல்லைக்கூடக் காண முடி யாது என்னும் உண்மை அன்று நன்றாக அறியப்பட்டது.

வான் சிறப்பு]

(புலவர் புராணம்

## 99. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த கதை

மதுரைமா நகரில் குலேச பாண்டியன் என்பவன் அர சாட்சி செய்து கொண்டிருந்தான். இவன் இலக்கண இலக் கியங்களை நன்கு கற்றுத் தேறியவன். ஆகவே, சங்கப் பலகை இவன் ஏறுவதற்கு இடங் கொடுத்தது. குலேச பாண்டியன் கல்வி அறிவிற் சிறந்தவன் என்பதை உணர்ந்த இடைக்காடர் செய்யுள்கள் பல செய்துகொண்டு வந்து அவனிடம் படித்தார். அவன் பொறாமையினால் அச்செய்யுட்களைப் பாராட்டாது வாளாவிருந்தான்.



இடைக்காடருக்குச் சினம் உண்டாகியது. அவர் மதுரைக் கடவுளை வணங்கிப், பாண்டியன் செய்த இழிவைக்கூறி விட்டு வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். மதுரைக் கட வுள் தம்முடைய வடிவத்தை மறைத்து வேறோர் இடத்திற்குச் சென்று எழுந்தருளியிருந்தார். மதுரைக் கோயிலில் சோம சுந்தரக் கடவுளின் திருவுருவங் காணப் பெறாத செய்தியைப் பாண்டியன் அறிந்தான். வேறிடத்தில் எழுந்தருளியிருக் கிற செய்தியையும் உணர்ந்தான்.மதுரைக் கடவுள் எழுந் தருளியுள்ள இடத்திற்குச் சென்று, "யாது காரணத்தால் இங்கெழுந்தருளியது? நேர்ந்த குறை என்ன?" என்று பல வாறு வேண்டிக்கொண்டான். இடைக்காடன் செய்யுளை இகழ்ச்சி செய்த தன்மையைக் கடவுள் வானொலி வாயிலாக அறிவித்தார். பாண்டியன் இடைக்காடரைச் சங்கப் புலவர் களோடு அழைத்துக்கொண்டு போய்ப் பலவாறு போற்றிப் பாராட்டினான். எல்லாப் புலவர்கட்குந் தக்கவாறு நன் கொடைகள் வழங்கினான். இடைக்காடருடைய பிணக்கும் தீர்ந்தது.

(திருவிளையாடல்)

[இடைக்காடர் பிணங்கிய

# 100. இடைஞானிகள் கதை

ஆம்பிரா நதிக் கரையான தென்கரை நாட்டுக் கொற்றவ ஹூரில் வசித்திருந்த ஓர் இடையர் தலைவனுடைய மகன் ஆனிரைகளை மேய்ப்பதற்குச் சென்றான்." மலைமேற் கொடிய விலங்குகள் இருக்கின்றன. ஆகையால் அங்கு ஆடுகளை ஓட்டிக்கொண்டு செல்லுதல் வேண்டாம் என்று தந்தை மகனுக்கு முன்னறிவிப்புக் கொடுத்தான். ஒரு நாள் மாக நேரத்தில் ஆடுகள் சென்ற வழியே சிறுவன் சென்றான். இரவு வந்து விட்டது. காட்டில் ஓரிடத்தில் தங்கி யிருந்தான். மறுநாள் பொழுது விடிந்தது. நிலத்திற் பதிந்து காணப் பெற்ற ஒரு கல்லின்மேல் ஒரு கொட்டையை வைத்து மற் றொரு கல்லால் தட்டினான். அடிக் கல்லில் இருந்து குருதி பெருகியது. அடிக் கல்லை நன்றாகப் பார்த்தபோது அஃ தொரு சிவலிங்கமாகக் காணப்பட்டது. சிறுவன் அக்கல்லைப். பிடித்துக்கொண்டு செயலற்றிருந்தான்.



முதல் நாள் ஆடுகளை ஓட்டிச் சென்ற பிள்ளையைக் காணாத இடையன் தேடிக்கொண்டு காட்டிற்கு வந்தான். மகனுடைய நிலையைக் கண்டு வருந்தினான். இறைவன் செயலென்று தேறினான். சிவலிங்கத்தின்மீது வெயில் மழை முதலியன படாமல் பந்தல் முதலியன அமைத்துக் கோயி லாக்கினான். பால் முதலியவைகளை முழுக்காட்டி வழிபாடு முதலியன செய்தான். இருவரும் இறை வழிபாடு செய்து கொண்டு அவ்விடத்திலேயே தங்கி யிருந்தார்கள். தந்தை திருவடிப் பேறு பெற்ற பின் மகன் அவ்விடத்தில் வழிபட்டி ருந்தான். இவர்கள் இடைக் குலத்தினராகலின் இடை ஞானிகள் எனப்பட்டனர்.

ஒருவிதையைத்தட்டும் ஆயர் மதலை உவமையிலா அரியஞா னங்கொளச் சென்னியிற் செந்நீர் அருவியெனச் சொரிய நின் றன்னான் தனையாண்ட முக்கட் சுயம்பு வென்று மருவி வளர்தென் கரைநாடு சூழ்கொங்கு மண்டலமே.

(கொங்கு மண்டலச் செய்தி ]

(கொங்கு மண்டல சதகம்)

## 101. இடைநாய்க்கு எலும்பிட்ட கதை

ஓர் ஊரை யரசாண்ட அரசனிடம் பொருள் மிகுதியாக இருந்தது. ஆனால் அவ்வரசனுடைய பொருளறையானது பலமான கட்டுக்காவலுடையதாக இருந்தது. கள்ளர்கள் பலர் எவ்வகையிலேனும் அரசனுடைய பொருளறையிற் புகுந்து களவு செய்துவிட வேண்டும் என்று முடிவு செய்த னர்.பொருளறையைக் காக்கும் காவல்காரர்கள் நால்வர். அவர் கள் மயக்கந்தரும் அபினி கஞ்சா முதலியவைகளை அடிக்கடி பயன்படுத்துவதுண்டு. இதனை உணர்ந்துகொண்ட கள்வர் கள் நால்வர் ஒருநாள் நள்ளிரவில் காவலர்கள் விரும்பும் போதைப் பொருள்களோடு அவர்களிடம் சென்றனர். சிறிது சிறிதாகப் பேசி அவர்களை நெருங்கினர். பிறகு அவர்களோடு சிறிது நேரம் தங்கினர். தாங்கள் கொண்டு சென்ற



போதைப் பொருள்களை அவர்கட்கு வழங்கினர். இதனால் அறிவு மயங்கிய காவலர்கள் தந்நினைவற்றிருந்தனர். இச்சமயத்தில் கள்ளர்கள் தம்மவர் சிலரை யேவிப் பொருளறையில் இருந்து வேண்டிய அளவு பொருளை அள்ளிக்கொண்டுபோகச் செய்த பிறகு தாமும் அவ்விடத்தை விட்டு மெதுவாக நழுவிவிட்டனர்.

மறுநாட் காலையில் எழுந்து பொருளறையைப் பார்க்க வந்த அரசன் காவலர்கள் மயங்கிக் கிடத்தலையும் பக்கத்தில் போதைப் பொருள்கள் இருத்தலையும் பொருளறை திறந்து கிடத்தலையுங் கண்டான். நிகழ்ந்ததை ஒருவாறு ஊகித்துக் கொண்டான். இடைநாய்க்குக் கள்ளர்கள் என்பிடுமாறு நுங்கட்குங் கள்ளர்கள் என் பிட்டனரோவென்று காவலர்களை எழுப்பி உசாவினான். காவலர்கள் தங்கள் மடமைக்கு நாணித் தலை கவிழ்ந்தனர்.

[வஞ்சகர்கள் சூழ்ச்சி]

# 102. இடையாலத்தான் கதை

முன்னாளில் தொண்டை வளநாட்டில் இடையாலம் என்னும் ஊரில் வேளாளன் ஒருவன் இருந்தான். மிகச் செல்வம் படைத்த இவன் எளியவர்கட்கு உணவுச் சாலை ஏற்படுத்தி அவ்வுணவுச் சாலையின் கதவை எச்சமயத்திலும் மூடாமல் திறந்துவைத்து வறியவர்கட்கு



உணவிடச் செய்தான். தன் வீட்டிலும் அவ்வாறே உணவிடச் செய்ததோடு கதவைச் சாத்தாமலிருக்கும்படியாகவுஞ் செய்தான். இதனால் இவனுக்கு, "அடையாத வாசல் உடையான்" என்று சிறப்புப் பெயர் உண்டாகியது. பொருளைத் தேடியவர்கள் அதனைப் பாதுகாத்துவைக்குமிடம் எளியவர்களின் வயிறே என்பதை இவன் நன்கு உணர்ந்திருந்தான்.

(தொண்டை மண்டல சதகச் செய்தி]

## 103. இடையே புகுந்து நெருக்கிய கதை



பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என் னும் மூவரும் ஒருவரையொருவர் அறியார்கள். இவர்கள் மூவரும் ஒருகாலத்தில் திருக்கோவலூரை யடைந்து மாயோனைப் போற்றி வழிபட்டார்கள். பிறகு தங்கள் இருப்பிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் மழை வந்து விட்டது. அப்பொழுது ஒரு வீட்டு இடை கழியில் மூவரும் வந்து தங்கினார்கள். அவ்விடம் எத்தகைய தென்றால், ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்.மூவ ரும் அங்கு நின்று கொண்டிருந்த பொழுது மாயோன் அவ் விடத்தில் தாமும் ஒரு மனிதவுருவத்தோடு அவர்களிடையே புகுந்தார். இதனால் இப்பொழுது

இடம் நெருக்கடியாகியது. இப்பொழுது இங்கு புதிதாக வந்து புகுந்துள்ளது யார் என்று அறிவுப் பார்வையால் பார்த்து மாயோனை அறிந்து கொண் டார்கள். ஒவ்வொருவருந் தனித் தனியே அந்தாதிகள் பாடினார்கள்.



"பாவருந் தமிழால் பேர்பெறு பனுவல் பாவலர் பாதிநா ளிரவில் மூவருந் தொழுது மொழிவிளக் கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு”

(வில்லிபாரதம்)

"நாத மராமரம் எய்தாய் முன்கோவல் நடந்ததுவே "
(திருவேங்கடத்தந்தாதி)

[மாயன் திருவிளையாடல்]

## 104. இந்திரத் துய்மன் கதை (1)

முன்னாளில் இந்திரத் துய்மன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். இவன் சிறந்த கல்வியறிவும் உயர்ந்த குணங்களும் அமையப்



பெற்றவன். மறதி என்னும் தீக்குணமும் இவனைப் பொருந்தியிருந்தது. செய்ய வேண் டிய செயல்களை அடிக்கடி மறந்துவிடுவான்.

இவன் அரசாட்சி செய்துகொண்டிருக்குங் காலத்தில் யாதோ ஓர் அலுவலை முன்னிட்டு அகத்திய முனிவர் இவன் பால் வருவதாக நேரங் குறித்துச் செய்தியனுப்பினார். இவன் அவருடைய வரவை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று மறதியுண்டாகிவிட்டது. அவர் வரவை அடியோடு மறந்து விட்டு வேறு வேலையில் ஈடுபட்டிருந்தான். அகத்தியர் வந்தார். அவருடைய வரவை

இவன் எதிர்கொண்டு போற்றாமற் போகவே அவருக்குச் சினம் பொங்கியது. " நீ யானையாகக் கடவாய்" என்று சாபங் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இம்மன்னனும் அவ்வாறே யானையானான். முதலைவாயில் அகப்பட்டுக் கொண்டு "ஆதி மூலமே " என்று அலறிய யானை இந்த யானைதான் என்பர். மறதியுடையவர்கட்குப் புகழுண்டாக மாட்டாது. அதனை எல்லோரும் ஒத்துக்கொள்வர் என்பதற்கு இவன் தக்க எடுத்துக்காட்டானான். [மறதி துன்பமளிக்கும்]

## 105, இந்திரத்துய்மன் கதை (2)

இந்திரத்துய்மன் என்னும் அரசன் பல வேள்விகள் செய்து தேவருலகடைந்தான். எண்ணிறந்த காலம் அங்கு இன்பங்களை நுகர்ந்துகொண்டிருந்தான். தேவர்கள் அவ னைப் பார்த்து, " உன்னுடைய பெயர் நிலவுலகிலே நிலை பெறா மையால் நீ நிலவுலகிற்குப் போய் நின்னுடைய பெயரை நிலை நாட்டி வரக் கடவாய்" என்று கூறித் தள்ளிவிட்டார்கள். நிலத்திலேவிழுந்த அவ்வரசன் மார்க்கண்டேய



முனிவரைக்கண்டு, " முனிவரே! என்னுடைய பெயர் உலகத்திலே உண்டா இல்லையா?" என்று கேட்டான். மார்க்கண்டேய முனிவர் "நான் சிவபிரானிடத்திலே என்றும் வாழ்ந்திருக்கும் (சிரஞ்சீவி) மேன்மை பெற்ற நாள் முதல் இன்றுவரையிலும் 187- பிரமகற்பம் ஆயிற்று. இதற்குள்ளே உன்னுடைய பெயர் இல்லை. என்னினும் மிகுந்த அசுவையுடைய கூகை ஒன்று இமயமலைச் சாரலிலே தவஞ் செய்துகொண்டிருக்கின்றது. அதனைக் கண்டு கேட்டறிவாயாக " என்றார்.

உடனே இந்திரத் துய்மன் ஒரு வெள்ளைக் குதிரை வடி வங்கொண்டு மார்க்கண்டேயரையுஞ் சுமந்துகொண்டுபோய் - அக்கூகையைக் கண்டு கேட்டான். அக் கூகை, "நான் 228 பிரம கற்பங் கண்டேன். இதற்குள்ளே உன்னுடைய பெயரில்லை. சரசுவதியாற்றுக்கரையிலே என்னினும் மூத்த

வர் ஒருவர் இருக்கிறார். அவருடைய பெயர் குரண்டதேவர் அவரைக் கண்டு கேட்டறி " என்று கூறியது.

அரசன் அக்கூகையையுங் கூட்டிக் கொண்டு போய்க் குரண்டதேவரைக் கண்டு கேட்டான். குரண்ட தேவர், "நான் 250 பிரம கற்பங் கண்டுள்ளேன். இதற்குள்ளே உன் னுடைய பெயர் வரவில்லை. கோபஞ்சத்தில் இருந்து தவஞ் செய்யும் கூர்மதேவர் என்னினும் மூத்தவர். அவரைக் கண்டு கேட்டறி " என்றார். பிறகு எல்லோரும் போய் அந்தக் கூர்ம தேவரைக் கண்டு கேட்டார்கள். கூர்மதேவர் இந்திரத்துய்மன் செய்த தருமம் முதலியவைகளை யாவர்க்கும் புலப்படச் சொன்னார் உடனே தேவர்கள் விமானத்தோடுவந்து, "அரசனே ! நின்னை நில உலகிலே விட்டது, நின்னுடைய சீர்த்தியை விளக்குவதற்கேயாம்" என்று கூறி மீளவும் அழைத்துக்கொண்டு சென்றார்கள். அரசன் மார்க்கண்டேயர் முதலியவர்களை அழைத்துக் கொண்டுபோய் அவரவர்கள் இடத்திலே விட்டு விட்டுத்தான் தேவர்களோடு விண்ணுல்கம் புகுந்தான்.

"விழுமிந் திரத்துய்மன் மிக்க புகழ் சொல்லிக் கழறமுன்போல் நாடடைந்த காதை - பழமையன்றோ?"

(ஆத்திசூடி வெண்பா)

(புகழ்]

(ஆத்திசூடி வெண்பா).

## 106. இந்திரனுக்கு வாலி பிறந்த கதை



வினதை என்பவளுக்கு அருணன் என்பவன் மகனாகப் பிறந்தான். அவன் கதிரவனுக்குத் தேரோட்டியாய்த் திகழ்ந் தான். ஒருநாள் தேவலோகத்திலே இந்திரனுடைய அவை யிலே கூத்து நிகழ்ந்தது. அருணன் அக்கூத்தினைப் பார்க்க அவாக் கொண்டான். அழகிய பெண் வடிவத்தை எடுத்துக் கொண்டு கூத்தாடும் பெண்கட்கு இடையே அமர்ந்து கூத்தினைப் பார்த்துக்கொண்டிருந்தான். பெண்வடிவத்தோடு இருந்த

அருணனை இந்திரன் கண்டான். அவன் மீது காதல் கொண்டு அவனைச் சேர்ந்தான். அவர்கள் இருவருடைய சேர்க்கையினால் வாலி பிறந்தான்.

வாலி சிவபெருமானை வழிபட்டுப் பன்னெடுங்காலந் தவ மியற்றினான். சிவபெருமான் வாலிக்கு முன் தோன்றி அருள் புரிந்தார். அப்பொழுது வாலி பெற்ற வரங்களுள் ஒன்று, தன்னை எதிர்க்கும் எதிரிகளுடைய ஆற்றலிற் பாதி தன்னைச் சேரவேண்டுமென்பது. பல வகையான மேன்மைகளைப்பெற்ற வாலி குரங்குகளுக்குத் தலைவனாய்க் கிட்கிந்தையில் இருந்து அரசியற்றிக் கொண்டிருந்தான். வாலியை நேராக எதிர்ப் பின் தம் ஆற்றலிற் பாதியை வாலி அடைந்து விடுவான் என் பதை இராமபிரான் உணர்ந்துதான், சுக்கிரீவனும் வாலியும் போர் புரிந்து கொண்டிருக்கும்போது தாம் மறைந்து நின்று கொன்றார்.



"எதிரிபலம் பாதிகொள்வ னென்றறிந்து வாலி வதைபுரிய ராமன் மறைந்து-
துதிபெறல்பார் பாரளந்த புன்னைவனப் பார்த்திவா அப்படியே சீரறிந்து
தூக்கிவினை செய் "

வகையறிந்து செயல் புரிதல்]

(ஆத்திசூடி வெண்பா)

## 107. இந்திரனைத் தோள் நெரித்த கதை

சிவபெருமானை இகழ்ந்து தக்கன் செய்த வேள்விக்குத் தேவர் கோமான் சென்றிருந்தான். சிவபெருமான் வீரபத்திரக் கடவுளை யழைத்து எல்லோருக்கும் நல்லறிவு புகட்டுமாறு அனுப்பினார். அந்த இடத்தில் இந்திரன் வீரபத்திரக் கடவுளு டைய கையிற் சிக்கினான். அவன் குயிலுருக் கொண்டு பறந்து ஓடிப்போக முயன்றான். ஆனால் வீரபத்திரக் கடவுள் விடவில்லை. அவனுடைய தோளைப் பிடித்து நெரித்தார். வாளால் வெட்டித் தரையில் தள்ளினார்.



(இந்திரனுக்குத் தண்டனை)

## 108. இந்திரன் பழிதீர்த்த கதை

தேவலோகத்தில் இந்திரன் கொலு வீற்றிருந்தான். அவனுக்கு முன்னர்த் தேவமாதர்களுடைய ஆடல்களும் பாடல்களும் நிகழ்ந்துகொண்டிருந்தன. அப்பொழுது தேவ குருவாகிய பிரகற்பதி பகவான் அங்கே வந்தார். ஆடல்களில் உள்ளத்தைச் செலுத்தியிருந்த இந்திரன் தன்னுடைய குருவைப் போற்றி வழிபடவில்லை. அதனால் அவர் மன வருத்தங்கொண்டு சென்றுவிட்டார். பிறகு இந்திரன் நான் முகனையடைந்து தான் தன்னுடைய குருவைப் போற்றாமல் விட்ட செய்தியைக் கூறினான். எல்லாவிடங்களினுந் தேடியும் குருவைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று கூறினான். அசுர குருவாகிய விசுவரூபனை ஆசிரியராகக்கொள்ளுமாறு நான்முகன் நவின்றான். விசுவரூபன் வஞ்சனையாகக் காரியஞ்செய்தலை இந்திரன் அறிந்து அவனைக் கொன்றுவிட் டான். அதனால் ஆசிரியனைக் கொன்ற பழி இந்திரனைப் பற்றியது. பலவிடங்கட்குஞ் சென்றும் அப்பழி நீங்கவில்லை. இறுதியில்




மதுரையை அடைந்து சோமசுந்தரக் கடவுளைப் 'போற்றி வழிபட்டான். அக்கடவுளினருளால் இந்திரனுடைய பழி தீர்ந்தது. {இந்திரன் பழி தீர்ந்தது]


(திருவிளையாடல்)

# 109. இந்திரன் மூங்கிலான கதை

சூரபன்மன் தேவர்களை யெல்லாம் வருத்தினான். இந்தி ரன் சூரபன்மனுக்கு அஞ்சிச் சீர்காழியை அடைந்தான். மூங்கில் வடிவாகக் கரந்துறைந்து சிவபெருமானை வழிபட்டான். பிறகு சிவபெருமான் முருகக் கடவுளைத் தோற்று வித்துச் சூரன் முதலானவர்களை அழித்து இந்திரன் விண் ணுலகத்திற்குக் குடியேறுமாறு செய்தார். இந்திரன் மூகிலுருவங்கொண்டு தங்கியிருந்தபடியால் சீகாழிக்கு வேணு புரம் என்றொரு பெயரும் உண்டாகியது.

"தருவினாட்டர சாள்வான் வேணுவின் உருவமாய்ப்பல நாளே தானுறு"





(இந்திரன் கரந்துறைந்தது]

(திருப்புகழ்)

## 110. இந்திரன் கதை

இந்திரன் தேவர்கட்குத் தலைவனாக விண்ணுலகில் இருப்பவன். இவன் வேள்விகள் பல புரிந்த நல்வினையால் அப்பதவியை அடைந்து சிறந்து திகழ்கிறான். இவன் அகலியையின் திருமணத்திற்கு முன்னரே அவளை அடைதற்குப் பெரு முயற்சி செய்தான்; ஆயினும் முடியவில்லை. ஆனால் அவள் மீது கொண்ட காதலோ நாளும் பெருகி வளர்ந்து கொண்டே யிருந்தது.



ஒருநாள் நடு இரவில் கௌதமருடைய இருப்பிடத்திற்குப் பக்கத்தில் போய்க் கோழி வடிவெடுத்துக் கூவினான். கௌதமர் பொழுது விடிந்துவிட்டதென்று எண்ணிப் படுக் கையைவிட்டு எழுந்து நீராடச் சென்றார். இந்திரனோ கௌதமரின் வடிவைத் தான் எடுத்துக்கொண்டு அகலியைத் தழுவினான்.

நீராடச் சென்ற கௌதமர் வஞ்சனையை உணர்ந்தார். விரைந்து திரும்பினார். இந்திரன் பூனை வடிவெடுத்து ஓடத் தொடங்கினான். ஆயினும் கௌதமர் அவனைத் தடுத்து நிறுத்தி அவனுக்குக் கொடிய சாபத்தைக் கொடுத்துவிட்டார். அதனால் இந்திரன் மறுகி நொந்தான்.

எவ்வளவு பெருமையுடையவர்களானாலுஞ் சரி; அவர் கள் பிறர் மனைவியை விரும்பித் தீமை புரிவார்களேயானால் அவர்களுடைய பெருமையெல்லாஞ் சிறுமையாய் இழிந்தொழிய நேரிடும் என்பது இந்திரனால் உலகத்தார்க்கு நன்கு புலப்படலாயிற்று.

(இராமாயணம்)

[பிறர் மனை நயத்தல்]

## 111. இந்திரன் கதை (2)

இந்திரன் ஒருநாள் தேவர் உலகில் உலாக்கொண்டான். சுற்றிலும் ஆடல் பாடல்களும் வேடிக்கைகளும் மிகுதியாக இருந்தன. இந்திரன் இச்சமயத்தில் தன்னை மறந்து இன்பக் களிப்பில் இனிது படிந்திருந்தான். சினங்கொள்வதிற் புகழ் பெற்ற துருவாச முனிவர் பூசை வேளையில் கரடியை விட்டாற் போல் அங்கு வந்து சேர்ந்தார். இறைவழிபாடு செய்து கொணர்ந்திருந்த மலர் ஒன்றைத் தேவர் கோமானிடம் கொடுத்தார். இவன்தான்



செய்வதின்னதென்று உணராமலே அம்மலரினை வாங்கி யானை மத்தகத்தில் வைத் தான். அம்மத யானை அதனைத் துதிக்கையால் எடுத்துக் காலுக்குக் கீழே போட்டு மிதித்தது. கண்டார் துருவாசர் இதனை.


அவருக்கு அளவுகடந்த சினம் உண்டாகியது. இந்திரனுக்கும் யானைக்குங் கொடிய சாபங் கொடுத்துவிட்டு அவ்விடமிருந்து அகன்றார். மிகுந்த உவகைக் களிப்பினால் உண்டாகும் மறதியானது வரம்பு கடந்த சினத்தினுந் தீயதாம் என்பது அன்று இந்திரனிடம் நன்கு அறியப்பட்டது.

(பெருமிதத்தால் தீங்கு நேரும்]

(திருவிளையாடல்)

## 112. இந்திரன் கதை (3)

தேவர் கோனாகிய இந்திரன் தேவலோகத்தில் அரசிருக் கையில் அமர்ந்திருந்தான். ஆடல் பாடல் முதலியன அங்கு நிகழ்ந்துகொண்டிருந்தன. அப்பொழுது தேவ குருவாகியபியாழ பகவான் அங்கு வந்தார். அரம்பையர்களின் ஆடல்ரடல்களில் சிந்தையைச் செலுத்தியிருந்த இந்திரன் தன் னுடைய அறிவாசிரியராகிய வியாழ



பகவானைப் போற்ற பில்லை. அதனால் வியாழ பகவான் உள்ளம் வருந்தி அவ் சிடம்விட்டு அகன்றார். இந்திரனுடைய செல்வங் குறையத் தொடங்கியது. அசுரர்கள் இந்திரனோடு போர் தொடுத் நுத தொல்லை கொடுத்தனர். அதனால் இந்திரன் அடைந்த அல்லல்கள் பல. தன் பதவியையும் இழந்தான். குருவை தாடித் தேடி அவருடைய அருளைப் பெற்றபின்னரே பழைய நிலைமைக்கு வந்தான். பலரோடு பகையைக் கொள்வதைப் வார்க்கிலும் நல்லாருடைய தொடர்பைக் கைவிடுதல் பத்து டங்கு மிகுதியான தீமையைத் தரும் என்பதை இவன் நன்கு உணர்ந்துகொண்டான்.

பெரியார் தொடர்பைவிடலாகாது]

(திருவிளையாடல்)

## 113. இயற்பகையார் கதை

சோழவள நாட்டில் உள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் மரபில் இயற்பகையார் தோன்றினார். இவர் அறு பத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். யார் வந்து எதனைக் கேட்டாலும் அதனை மறாமல் கொடுப்பது என்று இவர் உறுதி பூண்டு நின்றார். இவருடைய மனைவியின் பெயர் குணவதி. அம்மாதோடு இல்லறத்தை இனிது நடத்திக் கொண்டிருந்தார்.

இறைவர் இவருடைய பெருமையை உலகிற்குணர்த்த எண்ணினார். மிகுந்த காமம் உடையவர் போல் கோலங் கொண்டு இயற்பகையாரிடம் வந்தார். அவ்வாறு வந்த வரை ஓர் அடியவராகவே இவர் மதித்துப் போற்றினார். 'உமக்கு வேண்டியதைக் கேளுந் தருகிறேன்" என்றார்.



வந்தவர், "உம்முடைய மனைவியை எனக்குக் கொடும்" என்று கேட்டார். இவர் இல்லை என்று கூறாமல் அவர் விரும்பியவாறே கொடுத்தார்.

வந்தவர் தம்மோடு அழைத்துக்கொண்டு சென்றார். இவருடைய உறவினர்கள் அழைத்துக்கொண்டு செல்பவரைத் தடுத்தார்கள்.

இயற்பகையார் விரைந்து சென்று உறவினரை அச் சுறுத்தி விரட்டினார். சிறிது தொலை உடன்சென்று இரு வரையும் வழியனுப்பினார். சிறிது தொலை சென்ற இறைவன் இவரைக் கூவியழைத்தார். தம்முடைய வடிவத்தைக் காட் டிக் காட்சி கொடுத்தார்.

பொருளை இரவலர்க்கீதலும் கீர்த்தியுண்டாகும்படி வாழ் தலும் அல்லது உலகத்தில் தோன்றிய உயிர்களுக்கு வேறு நல்ல ஊதியம் இல்லை என்பதை உலகம் இவர்பால் நன் குணர்ந்தது.

"மடிமலர்க்கோதைச் சுரிகுழல் கருங்கட்டுணைவியை அளித்தும்"

(நல்லவர் நான் மணிமாலை)

[கொடைச் சிறப்பு]

(பெரியபுராணம்)

## 114. இரகு கதை

இரகு என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய ஓர் அர சன். இராமபிரான் இந்த இரகுவின் வழி முறையில்தான் தோன்றினார்.இரகு நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமை யப் பெற்று விளங்கினான். இவனிடம் அளவற்ற செல்வம் முதலிற் குவிந்திருந்தது. அச்செல்வத்தை யெல்லாம் வறிய வர்கட்கே இரகு வழங்கினான். நாளும் நாளும் இரவலர் கூட் டம் பெருகியது. ஆயினும் அரசன் தளராமல் வழங்கிக் கொண்டேயிருந்தான். இறுதியில் அரசனை வறுமை நிலை எய்தியது. அரண்மனையின் பொன் ஏனம் வெள்ளி ஏனம் பித்தளையேனம் எல்லாம் போய் மண்ணேனங்களே புழக்கத் திற்கு வந்துவிட்டன.

ஒரு நாள் கவசன் என்னும் பெயருடைய மறையவன் ஒருவன் இரகுவின் இல்லத்திற்கு வந்தான். அரசன் அமய மறையவன் கால் கழுவிக் கொள்ளுதற்கு மண் கலயம் ஒன்றி னால் தண்ணீரை மொண்டு கொடுத்தான். அரசனுடைய வறிய நிலையை உணர்ந்து கொண்ட மறையவன் இரகுவி னிடம் யாதுங் கூறாமல் புறப்பட்டுச் செல்லத் தொடங்கினான்.



அரசன் அந்தணனை நிறுத்தி, ''வந்த 'காரியம் யாது? யாதும் உரையாமல் புறப்பட்டுச் செல்லுகிறீர்களே ?” என்று உசாவினான்.அந்தணன் அரசனைப் பார்த்து, "என் குருவுக் குப் பதினான்கு கோடிப் பொன் காணிக்கை கொடுக்கவேண்டு மென்பது என் விருப்பம். அப்பொன்னை நின்பாற் பெறலாம் என்று எண்ணி வந்தேன். நீயோ மிக வறிய நிலையில் இருப் பதை அறிந்தேன். ஆகவே யாதுங் கூறாது புறப்பட்டுப் போகிறேன் " என்று சொன்னான்.

அரசன் அந்தணனைத் தடுத்து நிறுத்தினான். "குபேர னோடு போர் புரிந்தாயினும் அப்பொருளைக் கொண்டு வந்து கொடுக்கிறேன் " என்று கூறிவிட்டு வில்லோடு விண்ணை நோக்கிப் புறப்பட்டான். இவ்வரசனுடைய துணிவைக் குபேரன் உணர்ந்தான். இரகுவின் அரண்மனையிற் பெருஞ் செல்வங் குவியுமாறு செய்தான். அரசன் அந்தணனுக்கு வேண்டிய பொன் கொடுத்து அனுப்பினான்.

விரிவாகப் பொருள் இல்லாத காலத்திலும் தாஞ் செய்ய வேண்டிய கடமையை நன்கு உணர்ந்துள்ள பெரியோர்கள் பிறர்க்கு உதவி செய்வதற்குத் தளரமாட்டார்கள் என்பது இரகுவினிடத்தில் நன்கு விளங்கியது.

(வறுமையிற் செம்மை]

(இரகு வமிசம்)

## 115. இரட்டையர்கள் கதை

சோழ வளநாட்டில் ஆமிலந்துறை என்னும் ஊரில் இரட்டையர்கள் தோன்றினர். ஒருவர் முடவர், ஒருவர் குருடர். இருவரும் கலைமகள் திருவருள் கைவரப் பெற்றுச் சிறந்த புலவர்களாக விளங்கினர். முடவர் குருடருடைய தோள்மேல் ஏறிக்கொண்டு வழி காட்டுவர்.குருடர் அவரைச்



சுமந்து கொண்டு எல்லாவிடங்கட்குஞ் செல்லுவார். முடவர் பாட்டின் முற்பகுதியைப் பாடுவார். குருடர் பொருள் இன் னதுதான் என்று ஊகித்துக்கொண்டு பிற்பகுதியைப் பாடி முடித்துவிடுவார். இவர்கள் இருவருங் கலம்பகம் பாடுவதிற் சிறந்து விளங்கியபடியால் "கலம்பகத்திற்கு இரட்டையர்கள்" என்னுஞ் சிறப்புச் சொல்லும் இவர்கட்கு உண்டாகியது. இவர்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம் முதலிய கலம்பகங்களையும் ஏகாம்பர நாதர் உலா முதலிய நூல்களையும் பாடியுள்ளனர்.

''ஏகாம்பரனார் கச்சியுலா இசைக்கும் புலவர் இரட்டையர்கள் வாகாம்பதி ஆமிலந்துறையால் வழங்குஞ் சோழ மண்டலமே" [இரட்டைப் புலவர்கள்] (சோழ மண்டல சதகம்)

# 116. இரணியவர்மன் கதை

கவுடநாட்டு மன்னனுக்கு மூத்த மனைவியின் பால் புதல்வன் ஒருவன் தோன்றினான். அவன் சிங்கம்போன்ற நிறமுடையவனாக இருந்தபடியால் அவனுக்குச் சிங்கவர்மன் என்று பெயருண்டாகியது. அவன் தன்னுடைய தந்தையினி டத்தில் திருத்தநீர்ப் பயணஞ் செய்ய (தீர்த்த யாத்திரை செய்ய)



உடன்பாடு பெற்றான். பல விடங்களுக்குஞ் சென்று இறைவழிபாடு செய்தான். பிறகு ஒரு வேடன் வழிகாட்டத் தில்லைவனத்தை யடைந்தான். புலிக்கால் முனிவரையும் பதஞ்சலி முனிவரையும் போற்றி வழிபாடு செய்தான். சிவ கங்கையில் மூழ்கினான். அதனால் உடல் பொன்னிறமாகியது பொன்னிறமாகவே இரணியவர்மன் என்று பெயருண்டயிற்று.

"முன்னாகச் சிங்கவன் மன் மூழ்கச் சிவதடத்தில் பொன்னாக மாக்கும் புலியூரே'

(புலியூர் வெண்பா

இரணியவர்மன்]

## 117. இரணியன் கதை

இரணியன் என்பவன் பிரகலாதனுக்குத் தந்தை. அசுர மன்னன் எவ்வகையாலும் இறவாவரம் பெற்றவன். எல்லோருந் தன்னையே போற்ற வேண்டும் என்றும் தனக்குமேல் கடவுள் இல்லையென்றுங் கூறியவன்.



பிரகலாதனாகிய இவனுடைய மகன் இவன் பெயரைக் கூறாது திருமாலின் பெயரைக் கூறியதும் மிகுந்த சினங் கொண்டான்; 'நீ கூறிய திருமால் யாண்டுளான்? அவனைக் காட்டுக' என்று கடுத்தான்.

"அக்கடவுள் யாண்டு முளார் என்று பிரகலாதன் கூறி யதும், இத்தூணினும் உள்ளாரா? இருந்தால் காட்டு என்று தூணினையுடைத்தான். மால் அங்கிருந்து மனித மடங் கலாய்த் தோன்றி இவனை மாய்த்தார்.

பெருந் திருவைப் பெற்றிருந்தும் இவன் சீரிய வாழ்வைச் சிறப்புடன் மேவாமல் விரைவில் அழிந்தொழிந்தான். இவன் இவ்வாறு அழிந்து தொலைந்தமைக்கு இவனுடைய சினமே காரணமாக அமைந்து நின்றது.

ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணினா னாயின் சின முண்டாகாமற் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண் டும். அவ்வாறு சினத்தைப் பாதுகாத்துக் கொள்ளாவிட்டால் அது தன்னை உடையானையே கொன்று தொலைத்து விடும் என்பதற்கு இவனே எடுத்துக்காட்டாக அமைந்தான்.

[சினங்காத்தல்]

(இராமாயணம்)

## 118, இரண்டு அமைச்சர்களின் கதை

முன் காலத்தில் மகத நாட்டைக் காரிபுத்திரன் என்னும் பெயருடைய ஓர் அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந் ஈன். அவனுக்கு விபவன் என்றும் விபாண்டகன் என்றும் பெயருடைய இரண்டு அமைச்சர்களிருந்தார்கள். விபவன் குடிகளிடத்தில் மிகுந்த இரக்கம் உள்ளவனாக நடந்துகொண்டான். அவனுடைய நற்குணத்தைக் கண்டோர் மிகுந்த அன்பு பாராட்டினார்கள். இவன் தனக்கு வரும் வருமானத்திற்குத் தக்கவாறு செலவு செய்துகொண்டு பொருளைச் சேர்த்துவைத்தான். விபாண்டகனோ மூர்க்க குணம் படைத் தவன். வீண் செலவு செய்து கொண்டும் குடிகளை வருத். திக்கொண்டும் தன்னுடைய காலத்தைக் கழித்துக்கொண் டிருந்தான்.

விபாண்டகன் அடிக்கடி விபவன் வீட்டிற்குப்போய் வரு வது வழக்கம். ஒருநாள் விபவன் வீட்டிற்கு விபாண்டகன் சென்றான். அப்பொழுது விபவன் நோயால் பீடிக்கப்பட்டிருந் தான்.அவன் விபாண்டகனை அண்மையில் அழைத்து, "அன்பனே! நீ எனக்கு இதுவரையிலும் உற்ற துணைவனாக இருந்தாய். இனிமேலும் அவ்வாறே இருப்பாய் என்னும் எண்ணத்தோடு இப்போது உன்னை ஒன்று வேண்டிக் கொள்ளுகிறேன். என்னுடைய அருமைப் புதல்வர்கள் இரு வரையும் நீ பாதுகாத்தல் வேண்டும். நான் இனிமேல் உயிர் பிழைத்திருக்கமாட்டேன். எனக்கு ஒரு வேளையில் இருக்கும் அறிவு ஒரு வேளையில் இல்லை. யான் தேடிவைத்துள்ள பொருளையும் என்னுடைய புதல்வர்களையும் நி கைக்கொண்டு என் பிள்ளைகளைப் பாதுகாத்துப் பருவம்வந்த காலத்தில்

அவர் களுக்கு அப்பொருளைக் கொடுப்பதாக வாக்களித்தால் நான்



கவலையில்லாமல் இறப்பேன்" என்று கூறினான்.

விபாண்டகன் விபவனுடைய வேண்டுகோளின்படியே செய்வதாக வாக்களித்தான். அதனால் விபவன் தன் பிள்ளைகளை விபாண்டகன் கையில் ஒப்புவித்துத் தன் பெட்டியின் திறவுகோலையும் அவனிடம் தந்தான். சிறிது நேரத்திற் கெல்லாம் அவன் இறந்தான்.

சில நாட்கள் ஆயின. விபாண்டகன் விபவனுடைய பொருள்களை யெல்லாம் தானே கொள்ளை கொண்டான்.அவனுடைய இரண்டு பிள்ளைகளையும் பாதுகாவாமல் அலைய விட் டான். அப்பிள்ளைகள் இருவருந் துன்புற்று வருந்தியழுதார்கள். அரசனிடஞ் சென்று குறையை முறையிட்டார்கள்.

அரசன் விபாண்டகனை அழைத்து உசாவினான். விபவன்